₹100/-

ஞானகுரு

# மகிழ்ச்சி


மார்ச் 2022

எஸ்.கே.முருகன்

வலிமை
உடலில் இருந்து
பிறப்பதில்லை.!
அசைக்க முடியாத
மன உறுதியில்
இருந்து
பிறக்கிறது..!!



## கவித்துவம்



சிறியதை விழுங்கப் பெரியது
அதனை விழுங்க
மற்றொன்று
இடையில் மிதக்கும்
நதியிலை
என்றபடி கடக்கும்
காலத்தின் கால் தடத்தைத்தான்
நீங்கள் வாழ்க்கை
என்று கூறித் திரிகிறீர்கள்.
– இனியவன் காளிதாஸ்





# கர்மா என்பது ஒரு தடைக்கல்

நல்லது செய்தால், நல்லது நடக்கும். கெட்டது செய்தால் கெட்டதுதான் நடக்கும் என்பதையே கர்மா என்று பலரும் உறுதியாக நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இந்த உலகில் அப்படித்தான் நடக்கிறதா என்று கேள்வி எழுப்பினால், அதற்கும் ஒரு பதில் வைத்திருக்கிறார்கள். அதாவது, இந்த பிறவியில் இல்லை என்றாலும், அடுத்த பிறவியில், நிச்சயமாக கர்மா எதிரொலிக்கும் என்பார்கள். ஆனால், இதனை நம்புவதுதான் கடினம். ஒவ்வொரு நபரும் தங்கள் வாழ்க்கையில் சுயஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவே, காலகாலமாய் கர்மாவை வேதங்களும், இதிகாசங்களும் தூக்கிப்பிடிக்கின்றன.

அப்படி என்றால், நாம் நன்மைதான் செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லையா..? தீமை செய்தாலும் துன்பம் இன்றி வாழ முடியுமா?

இதன் அர்த்தம் அதுவல்ல. கர்மாவை பெரிதாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லைஇ. ஆனால், அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ள நியூட்டனின் மூன்றாவது விதியான, ‘ஒவ்வொரு செயலுக்கும், அதற்கு இணையான எதிர்வினை உண்டு’ என்பதை ஏற்கத்தான் வேண்டும். ஏனென்றால், இதனை பரிசோதனை செய்தே ஒவ்வொருவரும் உண்மையை அறிந்துகொள்ள முடியும்.

இது அறிவியலுக்கு மட்டுமின்றி, வாழ்க்கைக்கும் பொருந்தக்கூடிய ஒன்று. சாலையைக் கடக்க ஒருவருக்கு உதவி செய்துவிட்டு வீட்டுக்கு வந்தால், மனம் சந்தோஷமாக இருக்கும். அதுவே, சாலையில் செல்லும் ஒருவரை இடித்து கீழே தள்ளிவிட்டு வீட்டுக்கு தப்பியோடி வந்தால், மனம் நிம்மதியை தொலைத்துவிடும்.

எனவே, நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஏதேனும் எதிர்விளைவுகள் ஏற்படலாம் என்பதை உணர்ந்து, நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்குமான பொறுப்பை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும். நாம் செய்யும் செயலினால் ஒரு தீமை நடந்தாலும் அதனை ஏற்கவே செய்ய வேண்டும்.

உங்களால் இடித்து கீழே தள்ளப்பட்டவர் ஒருசில நபர்களுடன் வந்து அடித்தால், அதனையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வரவேண்டும். இப்படி தங்கள் செயலுக்கான பொறுப்பை தாங்களே ஏற்றுக்கொள்பவர்கள், கர்மாவை பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. இந்த பிரபஞ்சத்தில் இயற்கை அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானதாகவே இருக்கிறது. மழை, வெயில், காற்று போன்றவை எல்லோருக்கும் சமமாகவே கிடைக்கிறது. ஏழை வீட்டில் பிறந்தவனும் கோடீஸ்வரனாக முடியும், ஊனத்துடன் பிறந்தவர்களும் உயர் நிலைக்கு செல்ல முடியும் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் உள்ளன.

ஆகவே, இயற்கையை, பெற்றோரை, கர்மாவை உங்கள் வாழ்க்கையின் தடைக்கல்லாக பார்க்காதீர்கள். உங்கள் செயலே, உங்களுடைய வெற்றி, தோல்வி, நன்மை, தீமையை நிர்ணயிக்கிறது என்பதை உறுதியாக நம்புங்கள்.

**ஆசிரியர்**



# மருத்துவர் இல்லாத இடத்தில் வாழு!

வயதான தாயுடன் ஞானகுருவை சந்திக்க வந்தான் ஆனந்த். ‘அம்மாவை நகரத்துக்கு அழைக்கிறேன், வர மறுக்கிறார். நீங்கள்தான் அவரை என்னுடன் அனுப்ப வேண்டும்” என்று கோரிக்கை வைத்தான்.

‘‘ஏன் உன்னுடன் அவர் வரவேண்டும்..?”

‘‘ஏனென்றால், நகரத்தில்தான் நல்ல மருத்துவ வசதிகள் இருக்கிறது. வயதான காலத்தில் அவருக்கு ஏற்படும் வியாதிகளில் இருந்து நன்றாக குணம் அடைய முடியும். நானும் அருகில் இருந்து கவனிக்க முடியும். கிராமத்தில் இருக்கும்போது அவருக்கு ஏதேனும் ஆகிவிட்டால், எப்படி மருத்துவ வசதி பெற முடியும்?” படபடவென பேசினான் ஆனந்த்.

‘‘உன் தாய் நலமுடன் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டால், மருத்துவர் இல்லாத இடத்தில் கொண்டுபோய்விடு. அதுதான் அவருக்கு நல்ல மருந்து”

‘‘என்ன சொல்கிறீர்கள் என்பது புரியவில்லை..?”

‘‘கொரோனா காலத்தில் மருத்துவமனைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன. இந்த காலத்தில் காய்ச்சல், சளி, தலைவலி போன்ற பிரச்னைகள்கூட பலருக்கு ஏற்படவில்லை, யாரும் மருத்துவமனைக்குப் போகவில்லை. ஏன் தெரியுமா?”

‘‘எல்லோரும் பயந்துபோய் வீட்டில் இருந்தோம், சுகாதாரமான உணவுகளை மட்டுமே எடுத்துக்கொண்டோம், நல்ல ஓய்வு எடுத்தோம், அப்படியே எப்போதும் இருக்க முடியுமா?”

‘‘ஏன் முடியாது? மருத்துவர் இருக்கும் தைரியத்தில்தானே ஹோட்டலில் கண்டதையும் தின்கிறாய், இஷ்டப்பட்ட நேரத்தில் தூங்கி விழிக்கிறாய், வாகனத்தில் வேகமாகப் பறக்கிறாய்... பணம் சம்பாதிப்பதைவிட உடல் ஆரோக்கியம்தான் முக்கியம். அருகில் மருத்துவர் இல்லை என்ற உணர்வு இருந்தால், கூடுதல் எச்சரிக்கையுடன் வாழ்வாய். அதுதான் உடலுக்கு நல்லது..”

‘‘இது முட்டாள்தனமான கருத்து இல்லையா...? மருத்துவர் இல்லையென்றால், பெரிய பெரிய நோய்களில் இருந்து தப்பிக்க முடியுமா?”

‘‘சரி, கேன்சர், கிட்னி கோளாறுகளில் இருந்து தப்பி 100 ஆண்டுகள் வாழ்ந்த ஒருவரை காட்டுகிறாயா..? மருத்துவர்கள் நோயின் தீவிரத்தைத் தணிப்பார்களே தவிர, குறைக்க முடியாது. இயற்கையும் உன் உடலும்தான் நோயில் இருந்து விடுதலை தரும். அதனால், உன் தாய் இயற்கையுடன் இயற்கையாக கிராமத்தில் வாழட்டும். அவர் உடலால் முடியாத சமயத்தில் உன்னுடன் அழைத்துச்சென்று பணிவிடை செய்... அதுதான் அவருக்கு நல்லது...” அதுவே தன்னுடைய விருப்பம் என்பதையும் ஆனந்திடம் கண்களால் பேசினாள் தாய்.

# முடிவல்ல... ஆரம்பம்!




மரணம் ஒன்றைத் தவிர, இந்த உலகில் வேறு எதுவுமே மனிதனுக்கு நல்ல முடிவாக அமைந்துவிடுவதில்லை. ஏனென்றால், அடுத்த நொடியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ரகசியம் யாரும் அறியாதது.

சின்னச்சின்ன திருப்பங்களையும் முடிவாக நினைத்து அச்சப்படுபவர்கள்தான் ஏராளம் அந்த திருப்பத்தின் எல்லை வரையிலும் சென்று பார்த்தால்தான், அங்கே வேறு ஒரு வழி இருப்பது தென்படும். ஆனால், தூரத்தில் பார்க்கும்போது, எதுவும் தெளிவாகத் தெரிவதில்லை. எனவே, வழியில்லை என்று திகைத்து நின்றுவிடுகிறார்கள்.

மதிப்பெண் குறைவாக வாங்குதல், தேர்வில் தோல்வி அடைதல், காதல் தோல்வி, கடன் தொல்லை, உடல் வியாதி, வியாபாரத்தில் நஷ்டம், குடும்பத்தில் புரிதல் இன்மை போன்ற அற்பமான காரணங்களைக்கூட எதிர்கொள்ள முடியாமல், தற்கொலை செய்துகொள்பவர்கள், தற்கொலைக்கு முயற்சி செய்பவர்கள் ஏராளம்.

எத்தகைய தோல்வியில் இருந்தும், எத்தகைய சிக்கலில் இருந்தும் ஒருவரால் மீண்டுவர முடியும் என்பதுதான் உண்மை. இந்த சோதனைகள், வேதனைகளில் இருந்து நிச்சயம் வெளிவர முடியும் என்ற நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கை ஆழ்மனதில் நங்கூரம் போன்று பதிந்திருக்க வேண்டும்.

எத்தகைய துன்பம் வந்தாலும், அதில் இருந்து மீண்டு சாதனை படைக்க முடியும் என்பதற்கு வாழும் உதாரணமாக இருப்பவர் திரைப்படக் கலைஞரும் நாட்டியக் கலைஞருமான சுதா சந்திரன். அவரது கதையைக் கேளுங்கள்.

திருச்சிக்கு பக்கத்தில் நடந்தது அந்த கொடூரமான சாலை விபத்து. இடுப்புக்கு கீழே பலத்த காயம் ஏற்பட்டது சுதா சந்திரனுக்கு. தன் மகள் உயிர் பிழைத்ததே அதிசயம் என நிம்மதி பெருமூச்சு விட்ட சுதாவின் பெற்றோருக்கு, அடுத்ததாக பேரதிர்ச்சி ஒன்று

**“இனி சுதாவின் வாழ்க்கை சூனியமாகி விடுமோ..?” என்று கண்ணீர் வடித்தார்கள். ஆனால், அந்த விபத்தின் காரணமாக தன்னுடைய ஆசையையும் லட்சியத்தையும் விட்டுக்கொடுக்க சுதா தயாராக இல்லை.**

காத்திருந்தது.

"ஸாரி. இந்தப் பொண்ணோட உயிரை காப்பாத்தணும்னா... ஒரு காலை எடுத்தாகணும்" என்று சொன்னார்கள் டாக்டர்கள்.

’கூடாது’ என்று கதறினார்கள் சுதாவின் பெற்றோர். "மூணு வயசிலேயே எந்தப் பாட்டை கேட்டாலும் டான்ஸ் ஆடுவா டாக்டர். பெரிய டான்ஸரா வரணும்னு அவளுக்கு ஆசை.

ப்ளீஸ். எப்படியாவது அவள் காலை எடுக்காமல் காப்பாத்திடுங்க டாக்டர்." என்று கெஞ்சினார்கள். அவர் முடியாது என்று சொன்னதும், பிரபலமான பல டாக்டர்களை சந்தித்தார்கள்.



ஆனால் எல்லா டாக்டர்களும் சொன்ன ஒரே விஷயம், "வேறு வழியில்லை. இந்தப் பொண்ணு உயிரை காப்பாத்த இருக்கற ஒரே வழி... காலை எடுக்கறதுதான்." வேறுவழியின்றி கண்ணீருடன் அதற்கு சம்மதித்தனர் பெற்றோர். சுதா சந்திரனின் வயது அப்போது 16. முழங்காலுக்கு கீழே தன் வலது காலை பறி கொடுத்து விட்டு நின்ற சுதா சந்திரனை பார்த்து சொந்தக்காரர்கள் எல்லாம் கவலைப்பட்டார்கள்.

"இனி சுதாவின் வாழ்க்கை சூனியமாகி விடுமோ..?" என்று கண்ணீர் வடித்தார்கள்.

ஆனால், அந்த விபத்தின் காரணமாக தன்னுடைய ஆசையையும் லட்சியத்தையும் விட்டுக்கொடுக்க சுதா தயாராக இல்லை. எனவே, சிறிதும் தளர்வின்றி ஒற்றைக் காலில் நின்று ஓய்வின்றி போராடினார் சுதா. இரவும் பகலும் இருபத்து நான்கு மணி நேரமும் சுதா தன் ஆழ்மனதுக்குள் சொல்லிக் கொண்ட மந்திர வார்த்தைகள் இதுதான்.

"சாதிப்பேன். நான் சாதிப்பேன். மீண்டும் மேடைகளில் நடனமாடி நிச்சயமாக நான் சாதிப்பேன்." - இந்த வார்த்தைகள் சுதாவின் ஆழ்மனதுக்குள் பதிய பதிய ... அவரது ஆழ்மனம் தன் அற்புத சக்தியைக் காட்டியது.

ஜெய்ப்பூரைச் சேர்ந்த டாக்டர் சேத்தி என்பவரை சுதாவுக்கு அடையாளம் காட்டியது.

சுதா சந்திரனின் நடன ஏக்கத்தை நன்கு புரிந்து கொண்ட டாக்டர் சேத்தி செயற்கைக் காலை சுதாவுக்குப் பொருத்தினார். கொஞ்சம் கொஞ்சமாக நடக்கத் தொடங்கினார் சுதா. ஆனாலும் நடனமாட வேண்டிய அளவுக்கு செயற்கைக் கால் ஒத்துழைக்க வேண்டுமே..?

தினமும் இரவும் பகலும் பல மணி நேரங்கள் செயற்கைக் காலுடன் தள்ளாடி தள்ளாடி கடும் நடனப் பயிற்சிகளை மேற்கொண்டார் சுதா சந்திரன். வலியால்







# முடிவல்ல... ஆரம்பம்!

உயிர் போனது.

மீண்டும் மீண்டும் விழுந்தார். மீண்டும் மீண்டும் எழுந்தார்.

டாக்டர் சேத்தியும் அரும்பாடுபட்டு செயற்கைக் காலில் பல்வேறு மாற்றங்களை செய்து கொடுக்க ... பலகால பலத்த முயற்சிக்குப் பின் ஒரு நாள் ... சுதாவின் லட்சியம் வென்றது.

1984-ஆம் வருடம் செயற்கைக் காலுடன் ஒரு முழுநேர நடன நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார் சுதா சந்திரன். பத்திரிகைகள் எல்லாம் சுதா சந்திரனை பாராட்டி பக்கம் பக்கமாக எழுதினார்கள். அதைப் பார்த்து விட்டு உலக நாடுகள் பலவற்றில் இருந்தும் சுதாவுக்கு அழைப்புகள் வரத் தொடங்கின.

அப்புறம் என்ன ?

இந்தியாவில் மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும் சுதா சந்திரனின் நடன நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்தது. அவருக்கு பேரும் புகழும் குவிந்தது. 1985 ல் சுதா சந்திரனின் சாதனையை மையமாக வைத்து ’மயூரி’ என்ற திரைப் படம் தெலுங்கில் வெளி வந்து, ஓஹோ என்று ஓடி சூப்பர் ஹிட் ஆனது.

சுதா சந்திரனே அந்த படத்தில் கதாநாயகியாக நடித்தார். படமும் ஜெயித்தது. சுதா சந்திரனின் லட்சியமும் ஜெயித்தது.

இதுகுறித்து சுதா சந்திரன் சொல்வது என்ன தெரியுமா..? “நம் மனம்தான் நம் வெற்றிக்கும் தோல்விக்கும் முக்கியமான காரணம். நம்மால் நிச்சயம் முடியும்ங்கிற மனோபாவத்தை வளர்த்துக்கிட்டா நம்மால் எதையும் சாதிக்க முடியும். இதுதான் என் வாழ்க்கை எனக்கு சொல்லிக் கொடுத்த பர்சனல் பாடம்.” என்றார்.

ஆழ்மனதின் அற்புதம் எப்படிப்பட்டது என்பதற்கு உதாரணமாக என்றென்றும் இருப்பார் சுதா சந்திரன்.



# மூன்றாம் பாலினமும் காதலிக்கட்டும்.

அலைபாயும் கண்களுடன் ஒரு நடுத்தரவயது ஆணை அழைத்துவந்தார் மகேந்திரன். மரங்களைத் தொடுவதில் கிடைக்கும் பரவசத்தை அனுபவித்துக் கொண்டிருந்த ஞானகுரு, அந்த மனிதரின் கையைப் பிடித்து தன் அருகில் அமர வைத்தார். அவரை கொஞ்சநேரம் ஆறுதல் படுத்தி பின்னர் பேசத் தூண்டினார்.

‘‘எனக்கு ஒரே ஒரு மகன்... அவன் திடீர்னு பொம்பளை மாதிரி நடந்துக்க ஆரம்பிச்சான். அடிச்சித் திருத்தமுடியலை. டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போனோம். அப்புறமும் சரிப்படலை. வீட்டிலே எப்படியாவது இருந்துக்கோ... வெளியே போகும்போது மட்டும் ஆம்பிளை மாதிரி நடந்துக்கோன்னு சொன்னோம். அதை ஏத்துக்கிட்டு, அப்படியே நல்லபடியா இருந்தான்.

காலேஜ் படிச்சு முடிச்சுட்டு இப்பதான் ஒரு கம்பெனியில் வேலைக்குப் போனான். அதுக்குள்ள, அங்கே இருக்கிற ஒருத்தரை விரும்புறேன். அவரும் என்னை விரும்புறார். நான் அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். அவரோட சேர்ந்து தனியே வாழப்போறேன்னு சொல்றான். ஆம்பிளையும் ஆம்பிளையும் கல்யாணம் முடிக்கிறதை ஏத்துக்க முடியலை சாமி. எங்க குடும்பத்து ஆளுங்களுக்கு இன்னமும் இவனைப்பத்தி எதுவும் தெரியாது. அவனை தடுத்து நிறுத்த ஏதாச்சும் வழி இருக்குதா சாமி...’’ கடகடவென பேசி முடித்தவர், அவமானத்தில் இருப்பது போல் கூனிக்குறுகி இருந்தார்.

www.gyanaguru.com
www.gyanaguru.com

''வீட்டில் ஏதேனும் மிருகங்கள் அல்லது பறவையை வளர்க்கிறாயா..?''

''ஒரு நாய் வளர்க்கிறேன்.. .அதுதான் என்னுடைய ஆறுதல்...''

'நாயின் மீது நீ அன்பு செலுத்துகிறாயா..?''

''என்ன இப்படி கேட்கிறீங்க... தினமும் சாயங்காலம் வாக்கிங் கூட்டிட்டுப் போகலைன்னா கத்தி கூப்பாடு போடுவான். அவனுக்கு என் கூட வெளியே போறதுன்னா அவ்வளவு குஷி... எனக்கும் அவன் இல்லைன்னா பொழுதே போகாது...''

''அந்த நாயின் விருப்பதை ஏற்றுக்கொள்கிறாய், ஆனால் உன் மகனின் விருப்பத்தை ஏற்க மறுக்கிறாய்...''

''புரியலையே சாமி...''

''ஒரு நாயின் ஆசைக்காக அதனை வெளியே கூட்டிச் செல்கிறாய், அது விருப்பப்பட்ட உணவு கொடுக்கிறாய். அது எப்படியிருந்தாலும், என்ன செய்தாலும் ஏற்றுக்கொள்கிறாய்... ஆனால் உன் மகன் விருப்பத்தைக் கேட்க மறுக்கிறாய்..? உன்னுடைய மகன் இப்போது ஆண் அல்ல... பெண்ணும் அல்ல... மூன்றாம் பாலினம். அவனுடைய ஆசையும், விருப்பமும் வேறாகத்தான் இருக்கும். அதனை நீ ஏற்கத்தான் வேண்டும்...''

''அவனை ஏற்க நான் தயாராக இருக்கிறேன், அதற்காக அவனுடைய காதலையுமா..?''

''காதல் என்றாலே அது பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில் மட்டும்தான் மலரும் என்ற வழக்கமான மனப்பான்மையில் இருந்து நீ வெளியே வர வேண்டும். உனக்கும் நாய்க்கும் இடையில் இருப்பதும் ஒரு வகையான காதல்தான். காதல் எந்த பாகுபாடும் பார்ப்பதில்லை, காதலுக்கு எந்த எல்லையும் இல்லை....

"உன் மகன் விருப்பத்தைக் கேட்க மறுக்கிறாய்..? உன்னுடைய மகன் இப்போது ஆண் அல்ல... பெண்ணும் அல்ல... மூன்றாம் பாலினம். அவனுடைய ஆசையும், விருப்பமும் வேறாகத்தான் இருக்கும். அதனை நீ ஏற்கத்தான் வேண்டும்..."



ஜாதி, மதம், மொழி, நிறம், மட்டுமல்ல... ஆண், பெண் என்ற பால் கடந்ததும்தான் காதல். ஒரு பெண்ணுக்கும் இன்னொரு பெண்ணுக்கும், ஒரு ஆணுக்கும் இன்னொரு ஆணுக்கும், ஒரு திருநங்கைக்கும் ஒரு ஆணுக்கும், ஒரு திருநங்கைக்கும் ஒரு திருநம்பிக்கும், ஒரு திருநங்கைக்கும் இன்னொரு திருநங்கைகக்கும் அல்லது ஒரு திருநங்கைக்கும் ஒரு பெண்ணுக்கும் என இந்த காதல்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.


இதுவும் காதல்தான். உண்மையைச் சொல்வது என்றால் ஆண், பெண் காதலைவிட, மூன்றாம் பாலினத்தவர்களின் காதல் துயரம் நிறைந்தது. ஏனென்றால், அவர்கள் முதலில் அவர்களை காதலிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் முன்வர வேண்டும். அதன் பிறகுதான் அதே நிலையில் இருக்கும் வேறு ஒருவரை காதல் செய்யa முடியும். அவர்களுக்கும் காத்திருப்பு, அழுகை, ஊடல், காமம், பிரிவு, வலி போன்ற எல்லாமே உண்டு.

எனவே உன் மகனின் காதலை கொண்டாட முடியவில்லை என்றாலும், எந்த கேள்வியும் இன்றி அதை ஏற்றுக்கொள். அந்த காதலுக்குத் துணையாக நிற்க கற்றுக்கொள்...''

''ஆனால், என் உறவுகள்... நட்புகள்...?''

''நீ என்ன செய்யவேண்டும் என்பதுதான் உன் கவலையாக இருக்கவேண்டுமே தவிர, பிறர் என்ன நினைக் கிறார்கள் என்பது அல்ல. அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் ஒரு மகனையும் அவனது காதலையும் இழக்கத் தயாராக இரு...'' என்று எழுந்துகொண்டார் ஞானகுரு.

இருளில் இருந்தவர் வெளிச்சத்துக்குச் செல்வதா வேண்டாமா என்று இன்னமும் யோசித்துக்கொண்டே இருந்தார்.






www.gyanaguru.com





# நாடுகளுக்கு இடையில் வேலி எதற்கு..?

ரயில்வே ஸ்டேஷனில் அமர்ந்து பயணிகளின் அவசரத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் ஞானகுரு.

“சாமி.. வணக்கம்” ஆஜானுபாகுவான உருவத்தில் ஒரு ராணுவ அதிகாரி ஆஜரானான். அவனுடைய உடுப்பைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

”சொந்த ஊருக்குத்தானே போறீங்க..?”

”ஆமாம் சாமி... ராமநாதபுரம்”

”உங்க ஊருக்கு அந்நிய ராணுவத்தால ஏதாவது ஆபத்து இருக்குதோ..?'' முகத்தை சீரியஸாக வைத்தபடி கேட்ட ஞானகுருவின் தடாலடிக் கேள்வி அவனுக்குப் புரியவில்லை என்பது அவனது குழம்பிய முகத்தில் தெரிந்தது.

”இல்லே... ராணுவ உடையில் போறீங்களே... இறங்குனதும் சண்டை போட வேண்டி இருக்குமோன்னு கேட்டேன்...”

அப்போதும் கேள்வியின் குதர்க்கம் புரியாமல், “ஓ... இந்த டிரெஸ்ஸோட போறதைச் சொல்றீங்களா சாமி.... இப்படிப் போனாத்தான் சாமி மரியாதையா இருக்கும், பார்க்குறவங்க மதிப்பாங்க, பயப்படுவாங்க...” என்றான் பெருமையாக.

''ஆடைக்குத்தான் மரியாதை என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறாய். நீ கெட்டிக்காரன்தான்” என்று புன்னகைத்த பிறகுதான், கிண்டல் உறைத்தது. சட்டென அவனிடம் சீற்றம் எட்டிப்பார்த்தது. ''சாமி... என்னைப் பத்தித் தெரியாமப் பேசுறீங்க... கார்கில் போர்ல நாலுபேரை நேருக்குநேர் நின்று ஷூட் பண்ணியிருக்கேன். அதுக்காக டி்ஃபென்ஸ் மினிஸ்டர் கையால விருது வாங்கி இருக்கேன்...” சீருடையில் தொங்கிய விருதுகளில் ஒன்றைக் காட்டினான்.

”ம்... நாகரிகமான வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், ‘நாட்டுக்காக நான்கு கொலைகளைச் செய்தேன். அதற்கு விருது கொடுத்திருக்கிறார்கள்’ என்கிறாய் அப்படித்தானே...?”

இப்போது கொஞ்சம் யோசித்து, கோபத்தைக் குறைத்துப் பேசினான்.

”சாமி... செத்தவனுக்கும் எனக்கும் தனிப்பட்ட விரோதமா?

www.gyanaguru.com

www.gyanaguru.com

நாட்டுக்காகத்தான செஞ்சேன். அதை கொலைன்னு எப்படிச் சொல்ல முடியும்... யுத்த தர்மம் அதுதானே..?"

''ஆஹா... நாட்டுக்காக நீ எதையும் செய்துவிடுவாயோ... அதர்மமான இந்த தர்மத்தை கெட்டியாகப் பிடித்திருக்கிறாய். சரி, சொல். உனக்கு இந்த உலகில் யாரை மிகவும் பிடிக்கும்?"

"என் மனைவிதான் சாமி. ஊரில் எனக்காகவே காத்திருக்கும் என் மனைவியின் கடிதத்தைப் படித்தாலே என்னையறியாமல் கண்ணீர் வந்துவிடுகிறது. அடுத்ததாக என்னுடைய குழந்தையின் குரலை கேட்கும் போதெல்லாம் ஆனந்தம் வருகிறது"

"அப்படியென்றால் உன்னிடம் எக்கச்சக்க அன்பும் இருக்கிறது, கொலை வெறியும் இருக்கிறது ... அப்படித்தானே?"

"சாமி... என்ன சொல்ல வர்றீங்கன்னு புரியலை... நேரடியா சொல்லுங்க சாமி..." அருகிலிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கேட்டான்.

"உன்னுடைய மனதில் உண்மையான அன்பு இருக்கும்பட்சத்தில், எவரையாவது வெறுக்க முடியுமா? கொல்ல முடியுமா? எதிரியைக் கொன்று அதைக் கொண்டாட முடியுமா? நீ கொன்று போட்டவனுக்கும் ஒரு மனைவி, குழந்தை இருக்கும் என்பது தெரியுமா? அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த அந்தக் குடும்பம் ஏமாந்துபோய் அழுதிருப்பார்கள் என்பதை எப்போதாவது யோசித்துப் பார்த்திருக்கிறாயா? "

"நான் செஞ்சது தப்புன்னு சொல்றீங்களா சாமி?" உடனே கலவரமானான்.

"உன் மீது தவறு இல்லை, இந்த ராணுவம் என்ற அமைப்பே தவறுதான். எதற்காக இந்தியா, பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ் என்று நாடுகள் பிரிந்திருக்க வேண்டும். எல்லா இடத்திலும் நம்மைப் போன்ற மக்கள்தானே இருக்கிறார்கள். உலகில் இருக்கும் மக்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து வாழ்ந்தால் ராணுவம் தேவையில்லை, கொடியும் தேவை இல்லை... கொலையும் தேவையில்லை என்பதுதான் என் போன்ற பிச்சாண்டிகளின் ஆசை...

மொழியாலும் இனத்தாலும் உலக மக்கள் வேறுபட்டு இருந்தாலும் உணர்வுகளால் ஒன்றாகத்தானே இருக்கிறார்கள். அழுகைக்கும் சிரிப்புக்கும் ஏது பாஷை? காதலுக்கும் காமத்துக்கும் ஏது இனம்? அன்பு இருக்கும் இடத்தில் அடக்குமுறைக்கு என்ன வேலை..." அந்த பேச்சு அந்த ராணுவ அதிகாரிக்குப் பிடிக்கவில்லை என்றாலும், குற்ற உணர்ச்சி ததும்பும் குரலில், "சாமி... நான் மட்டுமில்ல, ராணுவத்தில வேலை பார்க்கிற நிறையபேர், போரையும் கொலை செய்ய விரும்புறதில்லை. எப்போ, யாருக்கு, யார் கையால் மரணம்னு தெரியாம வாழ்ந்துக்கிட்டு இருக்கிறோம், பெண்டாட்டி, பிள்ளையை விட்டுட்டு குளிர்ல, மழை, வெயில்ல பாடாப்படுறோம். நீங்க சொன்னமாதிரி ஏதாவது நடந்தா நல்லதுதான், ஆனா எனக்கு ராணுவத்தை விட்டா வேற வேலை தெரியாது சாமி...."

''வீட்டுக்காக என்றாலும் நாட்டுக்காக என்றாலும் அதன் பெயர் கொலைதான். நீ அந்த வேலையை விட்டு வெளியே வந்தால், அந்த வேலைக்குச் செல்ல ஆயிரம் பேர் காத்திருப்பார்கள் என்பதுதான் நிஜம். ஆகவே, நீ மட்டும் மனம் மாறுவதில் அர்த்தம் இல்லை... இந்த அரசியல் மாற வேண்டும் மனிதனை மனிதன் பிரித்துவைக்கும் மனப்பான்மை மாற வேண்டும்.

கருப்பர்கள், வெள்ளையர்கள் என்றோ இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள் என்று பாகுபாடு பார்த்து காற்று அடிப்பதில்லை. அப்படியொரு சுதந்திரக் காற்று உலகம் முழுவதும் வீசட்டும். வேலிகள் இல்லாத உலகம் அமையட்டும்..." என்றார் ஞானகுரு.


''மனம் முழுக்க மகிழ்ச்சியுடன் சொந்த ஊருக்குப் போய்க்கொண்டு இருந்தேன், என்னிடம் கேள்விகளை நிரப்பிவிட்டீர்கள்..." என்றபடி நகர்ந்தான் ராணுவ அதிகாரி

**மந்திரச்சொல்**

"சின்னச்சின்ன மகிழ்ச்சியில்தான் சொர்க்கம் இருக்கிறது. அது தெரியாமல் அனுபவத்தை தள்ளிப் போடாதே."







# பெண்ணை புரிந்துகொள்ள ஆசையா..?!

மனைவி கோயில் பிரகாரத்தை சுற்றிக் கொண்டிருக்க, அவளிடம் தப்பித்துவந்து கோயில் மண்டப வாசலில் அமர்ந்தான் கணவன். அருகிலிருந்த ஞானகுருவை பார்த்ததும் ஒரு கும்பிடு வைத்தபடி, "இந்த பொம்பளைங்களை புரிஞ்சுக்கவே முடியலை சாமி. கோயில் முடிச்சுட்டு வீட்டுக்குப் போகலாம்னு நினைச்சேன், ஹோட்டலுக்குப் போவோம்னு அடம் பிடிக்கிறா.." என்று புலம்பினான்.

**"அவள் என்ன மெஷினா புரிந்துகொள்வதற்கு?"**

**"என்ன சொல்றீங்கன்னு புரியலையே சாமி..?""**

"ஒரு கடிகாரம் எப்படி ஓடுகிறது என்பதை எளிதாக சொல்லிவிடலாம். பழுது என்றால் என்ன பிரச்னை என்பதை எளிதில் கண்டுகொள்ள முடியும். ஏனென்றால், அது ஒரு குறிப்பிட்ட செயலை மட்டுமே செய்வதற்காக உருவாக்கப்பட்டது. தொழில்நுட்பம் தெரிந்தவனுக்கு அதனை சரிசெய்வதும், புரிந்துகொள்வதும் எளிது. ஆனால், பெண் அப்படியில்லை. பெண் மட்டுமல்ல ஒவ்வொரு ஆணும் மனதால் இயங்குபவர்கள். உன்னையே உன்னால் புரிந்துகொள்ள முடியாது எனும்போது, ஒரு பெண்ணை எப்படி புரிந்துகொள்வாய்..?"

**"அப்படியென்றால் எப்படித்தான் அவளை வழிக்கு கொண்டுவருவது..?"**

"இதுதான் பிரச்னை. நீ அவளுக்கு மாஸ்டர் ஆக இருக்க நினைக்கிறாய். நீ நினைப்பதை அந்த பெண் செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறாய். அப்படியென்றால் நீ ஒரு பொம்மையைத்தான் திருமணம் முடித்திருக்க வேண்டும். அதுதான், நீ சொல்வதை மட்டுமே செய்யும்..."

**"அவளை புரிந்துகொள்வதுதான் எப்படி?"**

"பேசு. அவள் விருப்பங்களைத் தெரிந்துகொள். உன் விருப்பத்தைச் சொல். அவளை மாற்றுவதற்கு முயலாதே. நீயும் மாற வேண்டாம். யார், எங்கு, எப்படி விட்டுக் கொடுப்பது என்று பேசு. இருவருக்கும் போதிய சுதந்திரம் இருக்கும்பட்சத்தில், ஒருவரை யொருவர் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கே எல்லாம் தெரிந்துவிடும். அதனால் சுதந்திரமாக இரு, சுதந்திரமாக இருக்கவிடு" என்றார். மீண்டும் ஒரு முறை கையெடுத்துக் கும்பிட்டான் கணவன்.

?கனவு ஏன் வருகிறது? கனவில் வருபவை நிஜமாக நடக்க வாய்ப்பு உண்டா?

**- எஸ்.செய்யது அலி பாத்திமா, ராம்நாட்.**

**ஞானகுரு :**

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், சீக்கியர் என்று எந்த மதப்பாகுபாடும் இல்லாமல் உலகில் உள்ள அத்தனை மனிதர்களுக்கும் கனவுகள் வருகின்றன. எனவே, எந்தக் கடவுளாலும் கனவினை தடுத்து நிறுத்தமுடியாது என்பதைப் புரிந்திருப்பாய். அனுதினமும் சேகரமாகும் குப்பைகளை மூளை வெளியே தூக்கி எறிவதுதான் கனவு. இந்த குப்பைகள் எல்லாம் உனக்குத் தெரிந்தும் தெரியாமலும் சேர்ந்தவைதான். அந்தக் குப்பைகளைக் கிளறி ஏதாவது கிடைக்குமா என்று தேடாதே... தொலைந்துபோவாய்.



# ஞானகுரு பதில்கள்

?இன்றைய சூழலில் எந்தத் தொழில் செய்தாலும் முன்னேற்றம் இல்லையே?

**- பி.மனோகர், அரும்பாக்கம்.**

**ஞானகுரு :**

கருப்புக் கண்ணாடியுடன் பார்ப்பவனுக்கு எல்லாமே இருட்டாகத்தான் தெரியும். முதலில் நீ வெளிச்சத்துக்கு வா. முழு கவனத்துடன் தேடுபவனுக்கு எல்லாமே வெளிச்சமாகத் தெரியும்.

?ஏதாவது சாதனை செய்தால்தான், மனிதனாகப் பிறந்து வாழ்ந்ததற்கு அர்த்தமா?

**- எஸ்.குமரேசன், சென்னை .**

**ஞானகுரு :**

அப்படி எந்த மடையன் சொன்னது? எந்தப் பறவையும் விலங்கும், அது வாழ்ந்த தடத்தை விட்டுச் செல்வதில்லை. சாதனை, வெற்றி என்ற குறியீடு எல்லாம் அடுத்தவருடன் ஒப்பிடும்போது உனக்குக் கிடைப்பதுதான். நீ தனி மனிதனாக ஒரு தீவில் அகப்பட்டுக்கொண்டால், ஏதாவது சாதனைகள் செய்ய ஆசைப்படுவாயா அல்லது எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்று நினைப்பாயா? பிறர் பாராட்டுவதற்காக சாதனை செய்ய நினைக்காதே... இயல்பாக வாழு. காற்று போல் கண்ணுக்குத் தெரியாமல் கரைந்து போ. சாதனை செய்வதுதான் உனக்கு சந்தோஷம் தரும் என்றால், வெற்றி, தோல்வி பற்றிய கவலையின்றி சாதனை செய்.






?ராசிக் கற்கள் பதித்த மோதிரத்தால் மனிதருக்கு அதிர்ஷ்டம் வர வாய்ப்பு உண்டா?

**- வி.காமாட்சி, செந்திவிநாயகபுரம், விருதுநகர்**

**ஞானகுரு :**

குடும்பப் பிரச்னை, கடன் தொல்லை, தீராத நோய், தொழில் நஷ்டம் போன்ற எந்தப் பிரச்னை என்றாலும் பொருத்தமான ராசிக் கல்லை அணிவதன் மூலம் வாழ்க்கையில் மாற்றங்களும் ஏற்றங்களும் பெறமுடியும் என்று நம்பிக்கையை விதைக்கும் ஜோதிடனுக்கு மட்டுமே அதனால் பயன் உண்டு. பைசாவுக்குப் பிரயோஜனமில்லாத கற்களையும் ராசிக் கற்கள் என்று ஏமாற்றி விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கும் பயன் உண்டு. மோதிரத்துக்குள் உறங்கும் கற்கள் உன் வாழ்க்கையை மாற்றிவிடும் என்றால், உன் காலுக்குக் கீழே புதைந்துகிடக்கும் பொக்கிஷங்களுக்கு உயிர் இல்லையா...







?நான் நல்லவனா... கெட்டவனா என்பதை எப்படி அறிந்துகொள்வது?

**- பி.ராமலிங்கம், மெயின் பஜார், சீர்காழி.**

**ஞானகுரு :**

நீ செத்துப்போனால் எளிதாக தெரிந்துகொள்ளலாம். அதற்காக நிஜமாக சாக வேண்டியதில்லை. கண்ணை மூடிக்கொண்டு, மரணம் வந்துவிட்டதைப் போல் நினைத்துப் பார்த்தால் போதும். ஆம், கட்டாந்தரையில் படுத்துக்கொண்டு கண்களை மூடு. உடலில் இருந்து உயிரைப் பிரித்து, உன் உடலையே நீ வேடிக்கை பார். உன் மனைவி, குழந்தைகள், உறவினர்கள், நண்பர்கள், அக்கம்பக்கத்தினர் எல்லாம் உன் மரணத்தை எப்படி எதிர்கொள்வார்கள் என்று மனதினுள் கற்பனை செய். உன் எதிரிகள் என்ன நினைப்பார்கள், உன்னுடன் பணி புரிபவர்கள் என்ன பேசுவார்கள் என்று, அவர்கள் பக்கத்தில் இருந்து யோசித்துப் பார். யாராவது ஒரே ஒருவராவது உன் மரணத்துக்காக சந்தோஷப்படலாம் என்று நீயே நினைத்தால், நீ கெட்டவன்.



?என்ன செய்தால் வருங்காலத்தில் மகிழ்வாய் வாழலாம்?

**- எம்.வசந்தா, திண்டுக்கல்**

**ஞானகுரு :**

இந்த கணத்தில், இந்த நிமிடத்தில், இந்தக் காலத்தில் மகிழ்ச்சியாக வாழத் தெரியாதவன், எந்தக் காலத்திலும் சந்தோஷமாக வாழமுடியாது. எத்தனை சேர்த்துவைத்தாலும் அவனுடைய வருங்காலம் கானல் நீர்தான். அதனால் நாளைக்காக காத்திருக்காதே, இந்த நொடியில் மகிழ்வுடன் வாழத் தொடங்கு.





?பள்ளிக்கூடத்தில் கற்றுத்தரும் கல்வி முறை எந்த அளவுக்கு மாணாக்கரின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும்?

**- எஸ்.சுந்தரராஜன், கன்னியாகுமரி.**

**ஞானகுரு :**

பள்ளியில் கற்பிக்கப்படும் கல்வி முறையானது அறிவூட்டம் கொடுப்பதாக இருக்க வேண்டும். ஆனால், இன்றைய கல்வி முறையோ, வேலைவாய்ப்பை குறிவைத்தே செல்கிறது. மழை, காற்று, வெயில் போன்று சகலருக்கும் சமமான கல்வி கிடைக்க வேண்டும். ஆனால், செல்வந்தருக்கு ஒரு கல்வியும், ஏழைகளுக்கு ஒரு கல்வியுமாக இருப்பது பேரபத்தம். எல்லோரையும் ஏற்றிவிட வேண்டிய ஏணி இப்போது கீழே கிடக்கிறது. அதனை தூக்கி எடுத்து மரத்தில் சாய்த்து ஏறுபவர்கள் வெற்றிக் கனியைப் பறிக்கிறார்கள். மற்றவர்கள் வேடிக்கை பார்த்தபடி தாண்டிச் செல்கிறார்கள். உண்மையில் நல்ல கல்வி முறை, நல்ல கல்விக் கூடம் என்று எதுவுமே இல்லை. நல்ல மாணாக்கன் மட்டுமே உண்டு. அதனால் நல்ல மாணாக்கரை உருவாக்கு.



?வரும் காலத்தில் கடவுள் நம்பிக்கை குறைந்துபோகுமா?

**- ராஜேஸ்வரன், பூஞ்சோலை.**

**ஞானகுரு :**

பிறர் போட்ட பாதையில் சொகுசாகப் பயணிக்கவே மனிதன் விரும்புகிறான். சொந்தமாக சிந்திப்பவன் எண்ணிக்கை எதிர்காலத்தில் இன்னமும் குறையத்தான் செய்யும். அதனால் சாமிக்கும் பேய்க்கும் மார்க்கெட்டும் மதிப்பும் கூடுமே தவிர குறையவே குறையாது.

# ஞானகுரு பதில்கள்

**?கடவுளை தரிசனம் செய்திருக்கிறீர்களா? ஆம் என்றால் அனுபவம் எப்படி இருந்தது?**

- எஸ்.விவேகானந்தன், மயிலாடுதுறை.

**ஞானகுரு :**

நான் கடவுளை தரிசனம் செய்தேன் என்று சொன்னால் நீ நிச்சயம் நம்பப் போவதில்லை. பிறகு ஏன் இப்படி ஒரு கேள்வி. உண்மையில் கடவுள் தரிசனத்தை உணர்த்தும் வலிமை எந்த எழுத்துக்களுக்கும் இல்லை. தேனின் சுவையை சுவைத்துத்தான் அறியமுடியும், தேன் என்று எழுதினால் இனிக்காது. நீயும் தேனை குடி.





**?தியானத்தில் என்னால் முழு மனதுடன் ஈடுபட முடியவில்லை. மனம் அலைபாய்கிறது. என்னால் ஆன்மிகத்தில் மேன்மை அடையவே முடியாதா?**

- எம்.கிருஷ்ணன், திருச்சி

**ஞானகுரு :**

மனம் என்பது காட்டாற்று வெள்ளம் மாதிரி. அதனை தடுத்து நிறுத்தமுடியாது என்றாலும் திசை மாற்ற முடியும். ஆம், நீ தீவிரமாக ஆசைப்படும் விஷயத்தில் மனதைத் திருப்பு. சோம்பேறித்தனம் இல்லாமல் சோர்வு இல்லாமல் ஒரு வேலையை உன்னால் முழுமையான ஈடுபாட்டுடன் செய்யமுடிகிறது என்றால், அதுதான் உண்மையான தியானம்.

**?என் தொழில் எதிரிகளை அழிக்கவில்லை என்றால், என்னால் இனி நிச்சயம் வெற்றி பெற முடியாது. ஆகவே, எந்த கடவுளுக்கு என்ன பூஜை செய்தால் நான் நினைப்பது நடக்கும் என்று விளக்கமாகத் தெரிவிப்பீர்களா?**

- என்.ராம்குமார், மதுரை.

**ஞானகுரு :**

பணத்துக்காக கொலை செய்யும் கூலிப்படை என்று கடவுளை நினைக்கிறாயோ? நானும் அந்த மாதிரி இடைத்தரகன் இல்லை. காவியும் வெள்ளுடையுமாக நிறைய சாமியார்கள் பெரிய பெரிய ஆசிரமம் வைத்துக்கொண்டு இதற்குத்தான் பயிற்சி வகுப்பு எடுக்கிறார்கள், அங்கேபோய் உன் பணத்தைக் கொட்டி... நீயும் கெட்டுப் போ.



**?திருட்டு, கொலை, கொள்ளை, லஞ்சம் எல்லாமே இந்த வயிற்றுக்காகத்தானே..?**

- பி.ராகவேந்திரன், ராஜபாளையம்.

**ஞானகுரு :**


வயிற்றுப் பசிக்காக திருடியவர்கள் சொற்பமே, ஆசைக்குத் திருடுபவர்களே இங்கு அதிகம். இதெல்லாம் தப்பே கிடையாது, தன்னை யாரும் கண்டுபிடிக்க முடியாது, தன்னை யாரும் கேள்வி கேட்க முடியாது, பிடிபட்டாலும் ஜெயில்தானே என்ற தெனாவட்டுத்தான் அடுத்தவரிடமிருந்து தைரியமாக அபகரிக்கத் தூண்டுகிறது. ஆனால், இவர்களுடைய ஆசை ஒருபோதும் முடிவுக்கு வருவதில்லை என்பதுதான் சோகம்.

**?தாய்மை பற்றியே உயர்வாக பேசப்படுகிறதே, தந்தை நிலை சும்மாதானா?**

- ஏ.அரவிந்த், சின்னமனூர்.

**ஞானகுரு:**

மூளையைவிட வயிறுதான் மனிதனுக்கு முக்கியம். அதனால்தான் வயிறுக்கு உணவு கொடுப்பவரையே தெய்வமாக நினைக்கிறான். தன்னுடைய பசியை மறந்து, பிள்ளையின் வயிறு காயக்கூடாது என்று பார்த்துப்பார்த்து உணவு கொடுப்பதால்தான், தாயையும் தாய்மையையும் உயர்வாகச் சொல்கிறான் மனிதன். அந்த உணவு பெறுவதற்கு வியர்வை சிந்தி உழைத்தாலும், தந்தை எப்போதும் காவல் புரியும் வேட்டை நாய்தான்.





**?மரணம் எப்படி நிகழ வேண்டும்?**

- என்.அருணா, சென்னை

**ஞானகுரு :**

படுக்கையில் படுத்ததும் எந்த நொடியில் தூக்கம் கண்களைத் தழுவுகிறது என்பதைக் கண்டறிந்திருக் கிறாயா? அதுபோல் உனக்குத் தெரியாமலே உன்னிடம் இருந்து உயிர் பிரிய வேண்டும். பூக்களில் இருந்து வாசம் வெளியேறுவதைப் போல், ஊதுபத்தியில் இருந்து புகை வெளியேறுவதைப் போல் இயல்பாக உயிர் வெளியேற வேண்டும். இப்படி ஒரு மரணத்துக் காக அன்புடன் காத்திரு. உன் ஆசைப்படியே நடக்கும்.



**?கடவுளுக்கு தேங்காய் உடைப்பது நல்லதா... பூ போடுவது நல்லதா?**

- பி.ரோகிணி, அரூர்.

**ஞானகுரு :**

உன்னுடைய சேலையை எடுத்து, உனக்கே பரிசாகக் கொடுத்தால் சந்தோஷப்படுவாயா? கடவுள் படைத்த பொருட்களை அவருக்கே பரிசாக கொடுப்பதும் அப்படித் தான். எதையாவது கொடுத்து கடவுளை காக்கா பிடிக்க நினையாதே... கடவுள் ஒன்றும் தெரியாத முட்டாள் அல்ல. கடவுளுக்குச் செய்ய நினைப்பதை கஷ்டத்தில் உள்ளவர் களுக்குச் செய். அதை கடவுளும் பெற்றுக்கொள்வார்.

**?பெண்ணுரிமை பெற என்ன செய்யவேண்டும்?**

- எஸ்.செல்வராணி, வாணியம்பாடி.

**ஞானகுரு :**

ஆணைப் போன்று சிகரெட் குடிக்கவும், உடை அணியவும், சுயநலமாகவும், சுதந்திரமாகவும் இருப்பதும் பெண்ணுரிமை என்று நினைக்கிறார்கள். இது ஆணாக மாறும் முயற்சியே தவிர பெண்ணுரிமை அல்ல. பெண்ணுக்கான உரிமை பெண்ணிடம்தான் உள்ளது. இதனை யாரும் தரவும் முடியாது, பெறவும் முடியாது. எல்லா காலங்களிலும் வெற்றிபெற்ற பெண் இருக்கத்தான் செய்கிறாள் என்பதை புரிந்துகொள். அப்படி மாறு.



# என் வீரம் எங்கே போனது...?



ஒரு கராத்தே மாஸ்டர் ஞானகுருவை சந்தித்தார். "சாமி நான் பிளாக் பெல்ட் வாங்கியிருக்கிறேன். தொடர்ந்து பயிற்சி எடுத்துவருகிறேன். என்னுடன் சண்டைக்கு வருபவர்களை என்னால் சமாளிக்கவும் செய்கிறேன். ஆனால், திடீரென நேற்று இரவு இரண்டு பேர் என்னை கத்தி முனையில் மிரட்டிய நேரத்தில், என்னுடைய பலம் எங்கே போனது என்றே தெரியவில்லை. என் கையிலிருந்த அத்தனை பணத்தையும் எடுத்துக் கொடுத்துவிட்டேன். ஏன் இப்படி நடக்கிறது..? ஏன் என்னால் தைரியமாக அவர்களை எதிர்க்க முடியவில்லை?" என்று கேட்டான்.

"ஏனென்றால் நீ பலமானவன் என்று நீயே நம்பவில்லை..."

"அது ஏன்..?"

"உனக்கு மட்டுமல்ல, எந்த மனிதனும் அவனை முழுமையாக புரிந்துகொண்டதில்லை, அதற்கு நேரம் ஒதுக்குவதும் இல்லை. உண்மையில் நீ பலமானவனா என்பதை தனிமையில்தான் நீ அறிந்துகொள்ள முடியும்..."

"அதற்கு நான் தியானம் செய்ய வேண்டுமா?"

"தியானம் மூலம் உன்னை அறிந்துகொள்ள முடியாது. ஆனால், மனதை கொஞ்சம் கொஞ்சமாக வலிமையாக்கிக்கொள்ள முடியும். கராத்தே கலையானது உனக்கு உடல் பலத்தை கொடுத்திருக்கலாம். மன பலம் இல்லாமல் உன்னால் எதையும் சாதிக்க முடியாது. சிறு வயதில் இருந்து எத்தனை பேருடன் எதற்காகவெல்லாம் மோதியிருக்கிறாய், சண்டை போட்டிருக்கிறாயா..?""

"இல்லை, நான் யாரிடமும் சண்டைக்குப் போவதில்லை. உண்மையில் நான் மிகவும் பயந்தவன். அதனால்தான் என் பெற்றோர் என்னை கராத்தே படிக்க அனுப்பினார்கள். கராத்தே கற்றபிறகும் என் தைரியம் எங்கே போனது?"

"இப்போதும் உன்னுடன் கராத்தே முறைப்படி மோதுவதற்கு ஆட்கள் வந்தால், நீ ஜெயிக்க வாய்ப்பு உண்டு. ஆனால், பொது இடங்களில் நீ இன்னமும் பழைய பயத்துடனே இருக்கிறாய். அதனால்தான், பிளாக் பெல்ட் வாங்கியபிறகும் யாரிடமும் நீ மோதியதில்லை..."

"அப்படியென்றால் நான் தைரியமாக இருக்கவே முடியாதா..? எனக்கு வீரம் வரவே வராதா..?"

"வரும். அதற்கு தனியே முயற்சியும் பயிற்சியும் செய். தவறு நடந்தால் தட்டிக் கேட்க முடியும் என்ற மன உறுதியை வளர்த்துக்கொள். அதனால் உனக்கு அடியும் உதையும் கிடைக்கலாம். ஏன், உயிரும் போகலாம், அதற்கு தயாராக இருக்கிறேன் என்று உனக்குள் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொள். தவறு நடந்தால் தட்டிக் கேட்பேன் என்ற மன உறுதியை வளர்த்துக்கொள். முதலில் ஆபத்து இல்லாத இடத்தில் உன் வீரத்தைக் காட்டு. சண்டை வரும் என்று தெரிந்தால், முதலில் அடிப்பவன் நீயாக இரு.... அதுவே உனக்கு தைரியம் கொடுத்துவிடும்"

"உயிருக்கே ஆபத்து வரலாம் எனும்போது சண்டை போடுவது அவசியமா..?""

"இல்லைதான். ஆனால், மனதில் தைரியம் இருக்கத்தான் வேண்டும். ஜெயிக்க முடியும் இடத்தில் எதிர்த்து நில் அல்லது ஓடிப் போய்விடு. உயிர் வாழ்தலே அனைத்தையும்விட முக்கியம் என்பதை புரிந்துகொள். யானையால் சிங்கத்தை எதிர்த்து சண்டை போடமுடியும் என்றாலும், அவை சண்டை போட முயல்வதில்லை, தப்பிக்கவே செய்கின்றன. அதுதான் புத்திசாலித்தனம். அதனால் தைரியமாக இரு, ஆனால் சண்டை போடாதே..."

நிம்மதியுடன் விடை பெற்றார் கராத்தே மாஸ்டர்.



**அத்தியாயம்-3**

**அந்த நாலு மனசுக்கு நன்றி**

# ஆழ்மனமே தாழ் திறவாய்!

கட்டுமஸ்தான ‘சிக்ஸ் பேக்’ உடலுக்கு ஆசைப்பட்டு ஜிம்மிற்கு போனாலும், பிராய்லர் கோழி போன்ற தொளதொள தொப்பை குறையாமல் இருப்பதுண்டு. அதேபோன்று 50 கிலோ பால்கோவா சிலையாக விரும்பும் பெண்ணின் ஆசையும் நிறைவேறாமல் இருப்பதும் உண்டு. இவர்கள் மட்டுமல்ல, எல்லோருமே கட்டுமஸ்தான உடம்புக்கு மனதார ஆசைப்படவே செய்கிறார்கள். அதற்காக சிலர் ஊட்டச்சத்து, உடற்பயிற்சி எடுத்துக் கொள்வதும் உண்டு. ஆனாலும் எல்லோருடைய ஆசையும் நிறைவேறுவது இல்லை.

ஏன் தெரியுமா..?

மனதார ஆசைப்படுவதும் ஜிம்மிற்கு போவதும் மட்டுமே போதும் என்று நினைக்கிறார்கள். ஆனால் எந்த மனதில் ஆசையை விதைக்க வேண்டுமோ, அந்த ஆழ் மனதைக் கண்டுகொள்வதற்கு முயற்சி செய்வதில்லை. அதனால்தான் இவர்கள் ஆசை நிறைவேறாமல் போனது.

இந்த நேரத்தில் நிறையப் பேருக்குக் குழப்பம் வரும். மனம் என்றால் ஒன்றுதானே இருக்கிறது. இன்னொரு மனதிற்கு எங்கே போவது?

உண்மைதான். அனைவருக்கும் ஒரே ஒரு மனது தான் இருக்கிறது. ஆனால், அது நான்கு வகையாக இயங்குகிறது. கணவன், தந்தை, அலுவலர், நண்பர் என ஒரே நபர் பல்வேறு கதாபாத்திரங்களாக இயங்குகிறார். குழந்தையிடம் விளையாடும் ஜாலி மனிதர் போலவே அவர் இருப்பார் என்ற சிந்தனையில் அவரை அலுவலகத்தில் அணுக முடியாது. ஒரு கோப்பில் கையெழுத்து வாங்க வேண்டும் என்றால், அலுவலரை அணுகும் முறையில் சென்றால் மட்டுமே, கேட்டது கிடைக்கும். அதுபோல் சரியான மனதையும்

www.gyanaguru.com




> திடீரென ஆபத்து வரும் நேரத்தில் ஒருவன் எதிர்த்து நிற்க வேண்டுமா அல்லது தப்பிக்க வேண்டுமா என்பதை வலது பக்க மூளைதான் முடிவு செய்கிறது. வீரன், கொடையாளி, திருடன், ஜொள்ளன், சந்தேகப்பிறவி, காதலன் என மனிதரின் தனித்தன்மையை பிரதிபலிப்பதும் வலது பக்க மூளைதான்.

### மனம் எனும் மாயச்சக்கரம்

மனித மூளை இயங்கும்போது மின் அலைகளை வெளிப்படுத்தும் செயல் வேகத்தை இ.இ.ஜி. கருவி மூலம் அளவிட்டு, நான்கு வகையாக அறிவியலார் கணக்கிட்டுள்ளனர்.

1. பீட்டா எனப்படும் விழிப்பு நிலை : 14 சைக்கிள்களுக்கு மேல்.

2. ஆல்ஃபா எனப்படும் தூக்கம் விழிப்பு கலந்த நிலை : 7 முதல் 14 சைக்கிள் வரை

3. தீட்டா எனப்படும் மயக்க நிலை : நான்கு முதல் ஏழு சைக்கிள் வரை

4. டெல்டா எனப்படும் சமாதி நிலை : பூஜ்ஜியம் முதல் 4 வரை

இந்த நான்கு நிலைகளில் ஆல்ஃபா நிலையே மனிதனுக்கு வெற்றி தேடித்தரக் கூடியது. ஹிப்னாடிசம் மூலம் மனதை மாற்றுவது தீட்டா எனப்படும் ஆழ்தூக்க நிலையில் மேற்கொள்ளப்படுகிறது.

சரியான கோணத்தில், சரியான நேரத்தில் அணுகினால்தான் வெற்றி கிட்டும்.

மனம் நான்கு வகையில் இயங்குவதாக அறியப்பட்டுள்ளது. விழித்திருக்கும் நேரத்தில் மட்டும் செயல்படுவது மேல் மனம் அல்லது வெளி மனம். தூக்கத்திற்கும் விழிப்புக்கும் இடையில் இயங்குவது ஆழ்மனம். முழுமையான தூக்கத்தில் இயங்குவது மயக்க மனம். தூக்கத்தையும் தாண்டிய உணர்வற்ற நிலை சமாதி மனம்.

ஒருவர் ஆழ்ந்த தூக்கத்திற்கு சென்றுவிட்ட மயக்கநிலை மனமும், கோமா நிலைக்குத் தள்ளப்பட்ட சமாதி நிலை மனமும் அணுகுவதற்கு சிரமமானது மட்டுமின்றி சிக்கல் நிறைந்தவை. அதனால் கடைசி இரண்டு நிலைகளையும் தள்ளிவைத்து, முதல் இரண்டு மனம் பற்றி முழுமையாக அறிந்துகொள்வோம்.

## மேல் மனம்

விழிப்பு நிலையில் மனிதனின் அன்றாட செயல்கள் அனைத்தும் மேல் மனதின் கட்டுப்பாட்டில் நடக்கின்றன. அதனால் இதனை நிகழ்கால மனம், வெளி மனம் என்கிறார்கள். இன்னொரு வகையில் இடதுபக்க மூளையின் செயல்பாடுகளே மேல் மனம் என்றும் அறியப்படுகிறது. பொதுவாக விழித்திருக்கும் நேரங்களில் மனிதர்களின் இடது மூளை முழு வேகத்தில் செயல்படுகிறது.

கண்களால் பார்ப்பது, காதால் கேட்பது, மூக்கால் நுகர்வது, வாயால் சுவைப்பது, தோலால் உணர்வது போன்ற உணர்வுகளை ஒன்றுகூட்டி இடது மூளை செயல்படுகிறது.. கல்வி கற்பது, கற்றவற்றை பயன்படுத்துவது, உடல் உறுப்புகளை இயக்குதல் போன்ற எல்லாமே இடது மூளையின் பிரத்யேக செயல்கள் என்கிறது மருத்துவம்.

இந்த நேரத்தில் மூளையின் செயல்வேகம் 14 சைக்கிள்கள் எனும் அளவீடுக்கு மேல் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. பொதுவாக இந்த வேகத்தில் உடலும் மனதும் ஒன்றிணைந்து செயல்படுவதில்லை. கோபம் வரும்போது மூளையின் செயல்வேகம் இன்னமும் அதிகரிப்பதால், மனதை கட்டுப்படுத்த முடியாமல், தங்களை மீறி ஆவேசப் பேச்சு, அவசர சண்டை நடக்கிறது.


மேல் மனம் அதிகம் ஆசைப்படக் கூடியது, அதேநேரம் நிமிடத்துக்கு நிமிடம் மாறவும் கூடியது. உடல் எடையைக் குறைக்கவேண்டும் என்று ஆசைப்படும் அதே நேரத்தில், வயிறு முட்ட பிரியாணி தின்னவும் ஆசைப்படும். அதனால் இந்த மேல் மனம் வாழ்வின் வெற்றிக்கு ஆசைப்படும் அளவுக்கு, உதவி புரிவதில்லை.

## ஆழ் மனம்

விழிப்புக்கும் உறக்கத்துக்கும் இடைப்பட்ட நிலையில் ஆழ்மனம் விழித்திருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது அன்றாடப் பணிகள் அனைத்தும் முடிந்து உறக்கத்திற்கு அல்லது ஓய்வுக்குத் தயாராகும் நேரத்தில், ஆழ் மனம் விழிப்புக்கு வருகிறது. மேல் மனதிற்கு வேலை இல்லையென்றால், ஆழ்மனம் செயல்படத் தொடங்குகிறது.

இந்த நேரத்தில் இடது மூளையின் செயல்பாடு குறைந்து, வலது பக்க மூளை செயல்படத் தொடங்குகிறது. ஆழ் மனதை உணர்வுகளால் கட்டப்பட்ட கோட்டை என்று சொல்லலாம். காதல், அன்பு, கோபம், பரிதாபம், ஆவேசம் போன்ற உணர்வுகளுக்குக் காரணம் வலது மூளைதான். சின்னச்சின்ன விஷயங்களைக் கண்டுகொள்ளாமல், முக்கியமான விஷயங்களில் மட்டும் ஆழ் மனம் அதிக அக்கறை செலுத்துகிறது.

பிறந்தது முதல் இன்றைய தினம் வரையிலான அத்தனை ஞாபகங்களும் வலது பக்க மூளையில் புதைந்துள்ளது. நல்லது மட்டுமின்றி கெட்டவையும், தேவையானது மட்டுமின்றி தேவை இல்லாததும் இந்த மூளையில் பதிந்திருக்கும். இந்த ஞாபகக் குறிப்புகளை ஒட்டுமொத்தமாக அலசி ஆராய்ந்து, அதன் அடிப்படையில்தான், வலது பக்க மூளை எனப்படும் ஆழ்மனம் முடிவு எடுக்கிறது.





திடீரென ஆபத்து வரும் நேரத்தில் ஒருவன் எதிர்த்து நிற்க வேண்டுமா அல்லது தப்பிக்க வேண்டுமா என்பதை வலது பக்க மூளைதான் முடிவு செய்கிறது. வீரன், கொடையாளி, திருடன், ஜொள்ளன், சந்தேகப்பிறவி, காதலன் என மனிதரின் தனித்தன்மையை பிரதிபலிப்பதும் வலது பக்க மூளைதான்.

வெற்றிபெற்ற கலைஞர்கள், தொழிலதிபர்கள், விஞ்ஞானிகள் போன்ற அனைவரும், வலதுபக்க மூளையை அதிகம் பயன்படுத்தியதாலே வெற்றி அடைந்தார்கள் என்று ஆய்வுகள் சொல்கின்றன. இந்த ஆழ்மனம்தான் மனிதனின் வெற்றி, தோல்வி, இன்பம், துன்பத்துக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. நீ எதுவாக மாற விரும்புகிறாயோ, அதுவாக மாறுவாய் என்ற பொன்மொழியின் சுருக்கமும் ஆழ்மன ரகசியம்தான்..

## கனவு கண்ட சிவாஜி

சத்ரபதி சிவாஜி இளமைக் காலத்தில் தாயிடம் வீரக்கதைகளைக் கேட்டு பயமின்றி வளர்ந்தவர். தினமும் படுக்கையில் கதை கேட்டவர், தன்னை ஒரு தோல்வி காணாத வீரனாக ஆழ்மனதில் வரித்துக்கொண்டார். அதனாலே மொகலாயர்களுடன் விரப்போர் புரிந்து வெற்றியடைய முடிந்தது. அதுமட்டுமின்றி நல்லாட்சி, குடிமக்கள் நலனிலும் அக்கறை காட்டுமாறு அம்மா வழி காட்டியிருந்தார். சிவாஜியின் கனவு மனதில் புதைந்து கிடந்த சக்தியின் துணையுடன் அவர் ஆட்சி புரிந்ததால், சிவாஜியின் ஆட்சி பொற்காலமாக போற்றப்படுகிறது.

## திருவாளர் ஷாஜஹான்

தனக்கு வாய்த்த ஒரே ஒரு மனைவியின் மீதே பிரியம் காட்ட முடியாமல் தவிக்கும் ஆண்கள் கூட்டத்தில் வித்தியாசமானவர் மன்னர் ஷாஜஹான். மூன்றாவது மனைவி மும்தாஜ் மீது மானாவாரியாக அன்பை பொழிந்தார். அதன் சாட்சியாக அவள் 14 குழந்தைகள் பெற்றெடுத்தாள். கடைசிக் குழந்தை பிறந்த நேரத்தில் ஜன்னி கண்டு மரணம் அடைந்தார்.

மாமன்னர் ஷாஜஹான் நினைத்திருந்தால் அவளைவிட எத்தனையோ அழகிகளை தேடிப்பிடித்து திருமணம் செய்திருக்கலாம். ஏனோ அவரது ஆழ்மனம் முழுமையாக மும்தாஜ் மீது மட்டுமே நிலைபெற்று நின்றுவிட்டது. அவரது ஆழ்மனதில் எத்தனை தூரம் மும்தாஜ் பதிந்திருக்கிறார் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்ட நினைத்தார். அதன் வெளிப்பாடுதான், இன்று உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழும் தாஜ்மஹால்.

இத்தனைக்கும் மும்தாஜ் இறந்து ஓர் ஆண்டுக்குப் பிறகே, அவர் தாஜ்மஹால் கட்டும் பணியைத் தொடங்கினார். உலகப்பெரும் கலைஞர்களை எல்லாம் ஒன்றுசேர்த்து 20 ஆண்டுகள் உழைப்பில் உருவாக்கப்பட்டது தாஜ்மஹால். ஆழ்மனம் என்னவெல்லாம் செய்யும் என்பதற்கு மிகச்சரியான உதாரணம் தாஜ்மஹால்தான்.

சத்ரபதி சிவாஜி போன்று ஆட்சி அமைக்கவோ, ஷாஜஹான் போன்று தாஜ்மஹால் கட்டவோ இன்று யாருக்கும் அவசியம் இல்லை. ஆசைப்பட்ட வேலை, நோய் இல்லாத வாழ்க்கை, சண்டை இல்லாமல் நிம்மதியான வாழ்க்கை போதும் என்கிறீர்களா?

நிச்சயம் கிடைக்கும். ஆசைப்பட்ட அத்தனையும் அள்ளிக்கொடுக்கும் வள்ளல் என்று ஆழ்மனதை சொல்லலாம். ஆழ்மனதை தூண்டிவிட்டு, வெற்றிபெறுவதற்கான எளிய வழிகளைப அடுத்து பார்க்கலாம்.

**– மனக்கண் திறக்கட்டும்.**

# பணம் சம்பாதிப்பது ஈஸி



**கோ**யில் சுற்றுசுவரில் சாய்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஞானகுருவின் அருகே ஒரு வாழைப்பழமும், வெற்றிலையும் வைத்த குடும்பத் தலைவன் ஒருவன், "பணம் சம்பாதிக்க ரொம்பவும் கஷ்டமா இருக்குது சாமி, ஏதாவது நல்ல வழி காட்டுங்களேன்..." என்றான்.

"உடலும் மனமும் உறுதியுடன் இருந்தால் எளிதாக பணம் சம்பாதித்துவிடலாம்..." என்றார்.

"அதெல்லாம் நல்லாத்தான் சாமி இருக்கு..."

அவனை ஏறெடுத்து பார்த்து, "அப்படியா..? உனக்கு அறிமுகமே இல்லாத ஊரில் உன்னைக் கொண்டுபோய் விட்டால் எப்படி பிழைப்பாய்..?" என்று கேட்டார்.

"பிச்சைதான் எடுக்கணும்" நொந்துபோய் பதில் சொன்னான்.

"உடலும் மனமும் உறுதியாக இருப்பதாகச் சொன்னாய்.... ஆனால், பிச்சை எடுத்துதான் பிழைக்க வேண்டும் என்றும் சொல்கிறாய். இதன் அர்த்தம் உன் மனம் பலமாக இல்லை என்பதுதான். உடன் உடல் பலத்தை உன் மனம்கூட நம்பவில்லை. உன் உடல் உறுதியுடன் இருந்தால் எங்கே போயினும் உழைக்கவும் பிழைக்கவும் முடியும். ஏனென்றால், கல்லை உடைக்கவும், சுமை தூக்கவும் என கடின உழைப்புக்கு எப்போதும் ஆட்களின் தேவை இருக்கத்தான் செய்கிறது. இதுதவிர, ஏதேனும் ஒரு தனித்திறமையை வளர்த்துக்கொண்டால், சம்பாதிப்பதும் எளிது. உன்னிடம் ஏதேனும் தனித்திறமை இருக்கிறதா... இனி கற்றுக்கொள்ளும் எண்ணமாவது இருக்கிறதா..?

"இனிமே என்னத்தை சாமி கத்துக்கிறது..?"

"இந்த உறுதியில்லாத மனதை முதலில் சீர்படுத்து. எல்லா மனிதருக்கும் ஏதேனும் ஒரு தனித்தன்மை உண்டு. அந்த திறமைதான் அவன் கல்வி. கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதன் அர்த்தம் என்ன தெரியுமா? எங்கேயும் அவன் பணம் எளிதில் சம்பாதித்து வாழ முடியும் என்பதுதான். தனித்திறமைக்காக அதிகம் மெனக்கெட வேண்டாம். உனக்குத் தெரிந்ததை சிறப்பாகவும், முழு ஈடுபாட்டுடனும் செய். தெருவைக் கூட்டுவதாக இருந்தால்... நீதான் சிறந்த தூய்மைப் பணியாளராக இருக்க வேண்டும். சமையல்காரன் என்றால், உன் சமையல் வாசம் மக்களை இழுக்க வேண்டும். ஆட்டோ ஓட்டுவதாக இருந்தால், புன்னகையுடன் செய். இப்படி ஏதாவது ஒன்றை மகிழ்சியுடன் சிறப்பாகச் செய், பணம் உன்னைத் தேடி தானே வந்துவிடும்..."

உறுதியான மனதுடன் எழுந்தான் குடும்பஸ்தன்.



www.gyanaguru.com

# ஏழ்மைக்குக் காரணம் முன்ஜென்ம பாவமா..?



கண்ணில் தென்பட்ட அத்தனையும் வழிகள் என்பதுதான் ஞானகுருவின் பயண தத்துவம். மனம் போன போக்கிலும் கால் போகும் போக்கிலுமாக நடந்துசென்ற நேரத்தில், சாக்கடை ஆற்றின் கரையில் குடிசைகள் நிரம்பியிருப்பதைக் கண்டு உள்ளே நுழைந்தார்.

ஒவ்வொரு தடுப்பும் ஒவ்வொரு வீடாக இருக்கும் அவலத்தைக் கண்டபடி நகர்ந்தார். யாரும் அவரை தடுத்து நிறுத்திக் கேட்கவில்லை. நாலைந்து பெண்கள் ஒன்றுகூடி பேசியிருப்பதைக் கண்டதும் அவர்களுக்கு அருகில் சென்று அமர்ந்தார்.

‘‘யாருய்யா… நீ… போலீஸுக்குப் பயந்து இங்கே வந்திருக்கியா..?’’ என்று கேட்ட பெண்ணை பார்த்து சிரித்தார்.

‘‘சாமியாரா.. அவரெல்லாம் இந்த பக்கத்துக்குள்ள வர மாட்டாரே…?’’ இந்த கேள்விக்கும் பதில் சொல்லாமல் சிரித்தார்.

‘‘எல்லாத்துக்கும் சிரிக்கிறே… நீ என்ன லூசா..?’’ கேள்வியைக் கேட்டு மற்ற பெண்களும் சிரித்தார்கள். இதற்கும் சிரிப்புதான் பதிலாகக் கிடைத்தது. நால்வரில் ஒரு பெண் கொஞ்சம் உற்றுப் பார்த்துவிட்டுப் பேசினாள்.

‘‘சாமியாருன்னுதான் நினைக்கிறேன்… பசிக்காம இருக்க ஏதாச்சும் வழி இருக்குதா…’’ என்று கேட்டாள்.

‘‘நாக்கை உள்நோக்கி மடக்கி மேலண்ணத்தில் ஒட்டிக்கொள். அப்படி நீ லம்பிகா யோகத்தில் இருக்கும்

இங்கே இருக்கும் உங்களில் வசதியானவர் யார்?” என்று கேட்டார். ”தோ கீதே, ஆஸ்பெஸ்டாஸ் போட்ட வீடு. அதுலகீற சண்முகம் துட்டுக்காரன். வீட்ல டி.வி. கீது... பிரிட்ஜ் கீது. அவன்தான் எங்களுக்கு லோன் தர்றான், வட்டிக்குத்தான்...” என்று ஒரு பெண் வேகமாக முன்வந்து சொன்னாள்.





வரையிலும் உனக்கு பசியும் இல்லை, எந்த வேதனையும் இல்லை” என்றார் ஞானகுரு. நாக்கை ஒட்டிப்பார்த்த பெண்கள், சட்டென அதை கைவிட்டார்கள். “அட போ சாமி, ஏதாச்சும் சிம்பிளா சொன்னா என்ன..?” என்றதும் சிரித்தார் ஞானகுரு. ஒரு பெண் முன்னே வந்து, “ஏஞ்சாமி... இன்னாத்துக்கு எங்களை மட்டும் ஏழையா படைச்சான்? வூடு... வாசல்னு எப்ப நாங்க நிம்மதியா இருக்கிறது?” என்று கேட்டாள்.

”இப்படி நீ உன்னையே கேள்வி கேட்டுக் கொள்ளாததுதான் காரணம்...” .

”என்னா சாமி... நான் ஒண்ணு கேட்டா, நீ ஒண்ணு சொல்ற...” என்றாள். அந்தப் பெண்ணை அருகில் அழைத்த ஞானகுரு, ”உங்களது ஏழ்மைக்கு என்ன காரணம் என நீ நினைக்கிறாய்?”

”ம்... என்னத்தைச் சொல்றது, எல்லாம் எங்க தலையெழுத்து. எல்லாம் போன ஜென்மத்துல செஞ்ச பாவம்...” என்றாள்.

”அப்படி ஒரு காரணம் இருக்கவே முடியாது பெண்ணே... உன்னிடம் யாராவது இப்போது ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி, அடுத்த பிறவியில் தருகிறேன் என்றால் ஏற்றுக் கொள்வாயா? அதுபோன்றுதான் கடந்த பிறவியில் செய்த பாவத்திற்கு இந்த பிறவியில் கஷ்டப் படுகிறேன் என்று சொல்வது”

அதற்குள் அங்கே இன்னும் சில ஆண்களும் பெண்களும் சேர்ந்துகொண்டார்கள். உட்கார இடமின்றி சுற்றிக் கொண்டார்கள். ஒருத்தி நெளிந்து போன டம்ளரில் காபி கொண்டுவந்து, “சாமி காபி குடிப்பீங்களா...” என்று தயங்கியபடியே கேட்டாள்.

”நன்றி...” என்றபடி வாங்கிக் குடித்தார். ஒரு இளைஞன், “அப்படின்னா இன்னாத்துக்கு கொஞ்சபேர் பணக்காரங்களா வும், மத்தவங்க ஏழையாவும் இருக்கணும்...” என்று கேட்டான்.

”மனிதனது பிறப்பு என்பது மழைத்துளிகளைப் போன்றது. எந்த இடத்தில் விழுகிறதோ, அந்த இடத்திற்கு ஏற்ப அதன் தன்மை மாறுகிறது. இதோ இந்த சாக்கடையில் விழும் மழை சாக்கடையாகிறது, கடலில் விழும் தண்ணீர் உப்புத் தண்ணீராகிறது. குளத்தில் விழும் நீர் குடி நீராகிறது. அதுபோலத்தான் பிறப்பு எந்த குடும்பத்தில் நிகழ்கிறதோ, அந்த தன்மையை பெறுகிறார்கள் அவ்வளவுதான்... முன் ஜென்ம பாவம் என்பது ஒன்றே ஒன்றுதான். அதாவது நீ உன் பிள்ளை களுக்குக் கொடுக்கும் பாரம்பரிய நோய் மட்டும்தான் அது....”

”அதெல்லாம் பேசாத சாமி... ஏழையா கீறவன் பணக்காரனா ஆவ முடியாதா?”

”ஏன் முடியாது. ஏழைகள் உடலால் உழைக்கிறார்கள். பணக்காரர்களால் மூளையால் உழைக்கிறார்கள். ஏழைகளும் மூளையால் உழைத்தால் வெற்றி பெற முடியும்..”

**மந்திரச்சொல்**

எவரையும் குறை கூறும் முன், அந்த இடத்தில் நீ என்ன செய்திருப்பாய் என்று ஒருமுறை எண்ணிப் பார்.

”அப்படின்னா என்ன அர்த்தம் சாமி... எங்களுக்கு மூளை இல்லீயா..?” ஒருவன் கோபமானான்.

”மூளை இருப்பது முக்கியமல்ல, அதனை சரியாக பயன்படுத்தத் தெரிய வேண்டும்.... இன்று பணக்காரர்களாக இருப்பவர்கள் எல்லாமே ஒரு காலத்தில் ஏழைகளாக இருந்தவர்கள்தான். அதனால் ஏழையாக இருந்தாலும் பணக்காரனாக மாற முடியும்...” என்றவர் சிறிது நிறுத்தி, “இங்கே இருக்கும் உங்களில் வசதியானவர் யார்?” என்று கேட்டார்.

”தோ கீதே, ஆஸ்பெஸ்டாஸ் போட்ட வீடு. அதுலகீற சண்முகம் துட்டுக்காரன். வீட்ல டி.வி. கீது... பிரிட்ஜ் கீது. அவன்தான் எங்களுக்கு லோன் தர்றான், வட்டிக்குத்தான்...” என்று ஒரு பெண் வேகமாக முன்வந்து சொன்னாள்.

”உங்களில் ஒருவனாக இருந்தும் அவன் மட்டும் எப்படி ஜெயித்தான்..?”

பதில் தெரியாமல் விழித்தார்கள்...

“அது தண்ணியடிக்காது...” என்று ஒருத்தி சொன்னாள்.

”நன்றாக யோசித்துப் பாருங்கள். உங்களில் இருந்த ஒருவர் முன்னேற முடிகிறது என்றால், உங்களால் முடியாதா? அவர் உங்களைப் போன்று எந்தத் திட்டமும் இன்றி நாளெல்லாம் உழைப்பவராக இருக்க மாட்டார். ஆனால் நிச்சயம் உழைப்பார். எல்லோரும் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லவில்லை. அவரவர் தகுதிக்கு ஏற்ப, திறமைக்கு ஏற்ப மூளையைப் பயன்படுத்துங்கள். நீங்களும் பணம் சேர்க்கலாம், செல்வந்தர்கள் ஆகலாம்...” என்றார்.

அவர்கள் யோசிக்கத் தொடங்கிய நேரத்தில், நடக்கத் தொடங்கினார் ஞானகுரு.



# தோல்விக்கும் ஆசைப்படு!

கடன், வறுமை, நோய், குடும்ப தகராறு போன்ற காரணங்களால் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதைப் போன்றே, மாணவர்களின் தற்கொலையும் அதிகமாகிறது. சின்னச்சின்ன தோல்விகள், நிராசைகள், வருத்தங்களை தாங்கிக்கொள்ள முடியாமல் துவண்டுபோகிறது இளைய சமுதாயம்.

தோல்வி அடையாத மனிதன் இந்த உலகத்தில் யாருமே இல்லை. ஆனால் தோல்வியை எப்படி பார்க்கவேண்டும் என்பதற்காக இந்தக் கதை.

பள்ளிப் பருவத்தில் கால்பந்து விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டவனாக இருந்தான் விவேகானந்தன். அதிகநேரம் பந்துடன் செலவழிக்கும் ஆசையில் அதிகாலையிலேயே மைதானத்திற்கு சென்றுவிடுவான். மாலை பள்ளிக்கூடம் முடிந்தபிறகும் மைதானத்திலேயே கிடப்பான். அதனால் பந்தை கடத்திச் செல்வது, தடுத்துநிறுத்துவது, நீண்டநேரம் ஓடுவதில் கில்லாடியாக இருந்தான். பள்ளியின் கால்பந்து குழுவில் சேர்ந்து, மாநில அளவுக்கு விளையாடினான். அதன்பிறகு கல்லூரியில் சேர்ந்தபிறகும் கால்பந்து மீது மோகம் அதிகமானதே தவிர, குறையயவே இல்லை. அதனால் கல்லூரி படிப்பு முடிந்ததும், முழுநேர கால்பந்து விளையாட்டில் இறங்குவதற்கு விவேகானந்தன் முடிவு செய்தான். அவன் ஆசைக்கு பெற்றோரும் ஊக்கம் கொடுத்தார்கள்.

எல்லாம் நல்லபடியாகத்தான் போய்க்கொண்டு இருந்தது. ஒரு நாள் கல்லூரியில் இருந்து வீடு திரும்பும் வழியில் விபத்தில் எதிர்பாராதவிதமாக சிக்கிக் கொண்டான். வலது காலில் லாரி ஏறி இறங்கியது. அதனால் வேறு வழியே இல்லாமல் முழங்கால் வரையிலும் கால் எடுக்கவேண்டிய சூழல் உண்டானது. அவ்வளவுதான், தன்னுடைய வாழ்க்கை முற்றிலும் முடங்கிப்போனதாக அதிர்ந்தான் விவேகானந்தன். தன்னுடைய ஆசை, கனவு, லட்சியம் எல்லாம் கலைந்துபோன பிறகு இந்த உலகில் உயிர் வாழத்தான் வேண்டுமா என்று சிந்தித்தான். விவேகானந்தனை போலவே அவன் பெற்றோரும் ஆழ்ந்த துன்பத்தில் ஆழ்ந்தார்கள். தங்கள் ஒரே மகனுக்கு இப்படியொரு கொடுமை நிகழவேண்டுமா என்று அழுது தீர்த்தார்கள்.

அப்போது விவேகானந்தன் முன்பு இரண்டே கேள்விகள் இருந்தன. நொண்டி காலுடன் வாழ்க்கையை நடத்தி பெற்றோருக்கு ஆதரவாக இருப்பது அல்லது தற்கொலை செய்துகொண்டு இந்த கொடிய துன்பத்தில் இருந்து விடுதலை பெறுவது. மிகவும் நன்றாக சிந்தித்து, பெற்றோருக்காக வாழத்தான் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் விவேகானந்தன்.

படிப்பை பாதியில் நிறுத்தினான். தந்தைக்கு உதவியாக அவர் நடத்திய




ஹோட்டல் கல்லாவில் அமர்ந்தான். கடைக்கு வரும் வாடிக்கையாளர்களின் விருப்பம் எதுவாக இருக்கிறது என்று தீவிரமாக ஆய்வு செய்தான். ஹோட்டலை நவீனமாக மாற்றினான். வெளியூரில், வெளி மாநிலத்தில், வெளி நாட்டில் கிடைக்கும் வித்தியாசமான உணவுப்பண்டங்கள் தங்கள் ஹோட்டலிலும் கிடைக்குமாறு செய்தான். இரண்டே வருடத்தில் ஹோட்டல் தொழில் ஓஹோவென வளர்ந்தது. அக்கம்பக்கத்து ஊர்களில் சில கிளைகளைத் திறந்தான். ஐந்தே ஆண்டில் மிகப்பெரிய தொழிலதிபராக உயர்ந்து விட்டான் விவேகானந்தன். தங்கள் மகனுடைய முன்னேற்றத்தைக் கண்டு மனதார சந்தோஷப்பட்டார்கள் பெற்றோர்கள். வியாபாரத்தில் அவ்வப்போது புதுமைகளை புகுத்தி இன்னமும் முன்னேறிக்கொண்டே இருக்கிறான் விவேகானந்தன். இப்போது ஒரு கால்பந்து கிளப் தொடங்கி, ஏழை மாணவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறான்.

கால்பந்து விஷயத்தில் தோற்றுப்போயிருந்தாலும் வாழ்க்கையில் வெற்றி பெற்றுவிட்டான் விவேகானந்தன். தன்னுடைய ஆசையை, மோகத்தை வேறுவழியில் திருப்பி ஜெயித்திருக்கிறான். ஏதேனும் ஒரு வகையில் அங்கீகாரம் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டதை, ஹோட்டல் தொழிலில் சாதித்திருக்கிறான். இதற்கு அடிப்படை காரணம் தோல்வியை பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டதுதான்.

எந்த ஒரு விளையாட்டிலும் ஒருவருக்குத்தான் வெற்றி கிட்டும். மாரத்தான் போட்டியில் ஆயிரம் பேர் ஓடினாலும் ஒருவரால்தான் முதல்


www.gyanaguru.com



பரிசு பெறமுடியும். மற்ற அனைவரும் தோற்றுப்போனவர்கள் அல்ல, வெற்றிபெற முடியாதவர்கள். தோல்வியை எளிதாக எடுத்துக்கொள்பவரால்தான், அடுத்து வெற்றிபெற முடியும். விவேகானந்தன் போன்று இந்த உலகில் எத்தனையோ பேர், தங்கள் லட்சியத்தை மாற்றிக்கொண்டு மாபெரும் வெற்றியாளர்களாக மாறியிருக்கிறார்கள்.

அதனால் தோல்வி என்பது வெற்றியின் மறுபக்கம் என்பதை குழந்தைகளுக்கு சின்ன வயதில் இருந்தே பெற்றோர்கள் சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டும். தன்னைப்பற்றி ஒருவன் கொண்டிருக்கும் அகந்தையை, அதீத தன்னம்பிக்கையை, கர்வத்தை அடித்து நொறுக்கிறது தோல்வி. இன்னும் குறிப்பாக சொல்வதென்றால் ஒரு மனிதனை வெற்றிக்குத் தகுதியாக பக்குவப்படுத்துகிறது தோல்வி.

**மந்திரச்சொல்**

“நேற்றைய
கசப்புகளை
இன்று நீ
மறக்காவிட்டால்,
நாளைய
தினமும்
கசப்பாகவே
விடியும்.”

**? ஆனால்.... எனக்கு மட்டும் எப்போதும் தோல்வியே கிடைக்கிறதே?**

தோல்வி என்பது உன்னுடைய பலவீனத்தை சுட்டிக்காட்டும் அளவுகோல். உன்னுடைய பலவீனம் எதுவென்பதை கண்டறிந்தது, அதனை பலமாக மாற்றினால் மட்டுமே வெற்றியடைய முடியும். தோல்வியைக் கண்டு பயந்தவனும், தோல்வி ஏன் ஏற்பட்டது என்பதை அறியாதவனும் வாழ்நாள் முழுவதும் தோற்றுக்கொண்டே தான் இருப்பான். உன் ஒவ்வொரு தோல்வியிலும் உனக்கு கிடைத்த பாடத்தை மட்டும் உற்றுப்பார், வெற்றிக்கான சூத்திரம் தெரியும். அதனால் ஒவ்வொரு தோல்வியையும் வெற்றியைப் போலவே கொண்டாடு.

**? தோல்வியை எப்படி வெற்றியாக எடுத்துக்கொள்ள முடியும்?**

குழந்தை நடக்கத் தொடங்கும்போது ஏராளமான முறை கீழே விழும். உடனே கைதட்டி பாராட்டி, மீண்டும் எழுந்து நடப்பதற்கு நம்பிக்கை கொடுக்கிறோம். அப்போதுதான் அந்தக் குழந்தை விரைந்து நடக்கும். நடப்பதற்கு பழகும் குழந்தை கீழே விழுவதுபோலவே உனக்குக் கிடைக்கும் தோல்விகளை பார். ஒருவன் தோல்வியை எதிர்த்து மீண்டும் மீண்டும் போராடும்போது, அவனை வெற்றியாளனாக உலகம் மதிக்கிறது. தோல்வியை நினைத்து பயப்படுவனை உலகம் ஏளனம் செய்கிறது.

**? அப்படியென்றால் தோல்விதான் நல்லதா?**

தோல்வியை நல்லதாக அல்லது கெட்டதாக எடுத்துக்கொள்வது உன் கையில்தான் இருக்கிறது. ஒரே ஒரு விஷயத்தை மட்டும் தெளிவாக தெரிந்துகொண்டால் போதும். அது, தோல்வி நிரந்தனமானது அல்ல. தோல்வியைக் கண்டு அச்சப்படாதே. அதன் நிழலில்தான் வெற்றி ஒளிந்திருக்கிறது.








## கவித்துவம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது
_ பிரமிள்



# பணம் குட்டி போடட்டும்..!

மரத்தடியில் காய்ந்த சருகுகளுடன் விளையாடிக்கொண்டிருந்த ஞானகுருவை சந்தித்தான் ராமச்சந்திரன். தனிமையில் சந்திக்க வேண்டும் என்று வந்திருப்பது தெரிந்தது. பக்கத்தில் வந்து நின்றவன், ‘சாமி... எனக்கு வியாபாரத்தில் கிடைக்கும் பணத்தை வீட்டுக்குக் கொண்டு வந்ததும் எங்கே வைக்க வேண்டும் என்பது குழப்பமாக இருக்கிறது. பணப்பெட்டியில் வைக்கவேண்டும் என்று நான் சொல்கிறேன், பூஜை அறையில் வைத்து இரண்டு நாட்கள் கழித்து எடுக்க வேண்டும் என்று என் மனைவி சொல்கிறாள். எது சரியென்று சொல்லுங்களேன்..’ ரகசியம் கேட்பது போன்று மெலிந்த குரலில் கேட்டான்.

“பணத்தை ஒரு நாள்கூட வீட்டில் வைத்திருக்காதே, தூக்கி வெளியில் போடு” என்றபடி மீண்டும் இலைகளை அள்ளி விளையாடினார் ஞானகுரு.

“என்ன சாமி, இப்படி பொசுக்குன்னு சொல்லிட்டீங்க..?”

சிரித்தபடி தொடர்ந்தார் ஞானகுரு. “பணம் என்பது ஒரு செடியைப் போன்றது. அது வளர்ந்துகொண்டே இருக்க வேண்டும். அதை பெட்டிக்குள் அல்லது பூஜை அறையில் அடைத்துவைப்பது அதன் கழுத்தை நெரிப்பதற்கு சமம்...”

“இன்னமும் புரியலை சாமி...”

“பணத்துக்கு குட்டி போடும் குணம் உண்டு. ஆம், பணத்தை வங்கியில் போடு, இடம் வாங்கு, தங்கம் வாங்கு அல்லது தெளிவான மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களை தேர்வுசெய்து போடு. அதுவும் இல்லை என்றால், யாருக்காவது கடனாகக் கொடு. இப்படி என்ன செய்தாலும், அது தன்னைத்தானே வளர்த்துக்கொள்ளும். உன் பாஷையில் சொல்வது என்றால், பணம் குட்டி போடும். அதை உன்னுடைய வீட்டில் எந்த இடத்தில் பூட்டி வைத்தாலும், மூச்சு திணறத்தான் செய்யும். எந்த கோடீஸ்வரனும் வீட்டில் செல்வத்தை முடக்கி வைப்பதில்லை.


பல புதிய நிறுவனங்களை வாங்குவதும், உற்பத்தி பொருட்களை வாங்குவதுமாக கைக்கு வரும் பணத்தை செலவு செய்துகொண்டே இருப்பார்கள்... லாபம் கிடைக்கிறது என்பதற்காக ஒரே இடத்தில் முதலீடு செய்யவும் மாட்டார்கள். பணத்தை சந்தோஷமாக வெ/ளியே அனுப்பு... அதுவும் சந்தோஷமாகவே உன்னிடம் திரும்பிவரும்” என்று சொல்லி முடித்தார்.

பணத்துக்கு புதிய அர்த்தம் புரிந்து சென்றான் ராமச்சந்திரன்.



www.gyanaguru.com

# மூளைச்சாவு என்பது உண்மையா...?



## உடல் உறுப்பு தானம் பாவமா?

கனத்த இதயத்துடன் ஒரு பெற்றோர் ஞானகுருவிடம் வந்து நின்றனர். "என்னுடைய மகன் வேகமாக பைக் ஓட்டிச்செல்லும்போது விபத்தில் சிக்கிவிட்டான். கிட்டத்தட்ட 15 நாட்களுக்குப் பிறகு, அவன் மூளைச்சாவு அடைந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். அவன் உடல் உறுப்புகளை தானம் கேட்கிறார்கள், கொடுத்து விடலாமா? இறந்த பின்னும் அவன் உயிர் வாழ்வான் என்கிறார்கள். மனம் சஞ்சலப்படுவதால் உங்களிடம் அனுமதி கேட்க வந்தேன்" என்று கதறினர்.

"உன் மகனை கொலை செய்யலாமா என்று கேட்க வந்திருக்கிறாய், அப்படித்தானே?" என்று கேட்டதும் கதறினார்கள்.

''நாங்கள் விருப்பப்பட்டா செய்கிறோம் சாமி. அவனுக்கு மூளைச் சாவு ஏற்பட்டுவிட்டது என்கிறார்களே..?"

''அப்படியா? மூளை சாவு அடைந்துவிட்டால் என்னாகும்..?"''

''உடல் இயங்காது, இனிமேல் பிழைப்பதற்கு வாய்ப்பே இல்லை.."

''அப்படியென்றால், அவன் இதயம் இயங்க வில்லையா, ரத்தம் ஓடவுல்லையா, மூச்சு இயங்கவில்லையா?"

''அதெல்லாம் நடக்கிறது. ஆனால் எல்லா உறுப்புகளும் சேதம் அடைந்துவிட்டதால்,இனி பிழைப்பதற்கு வாய்ப்பே இல்லை என்கிறார்கள்..."

"ஓர் உயிரை கொலை செய்யும் அதிகாரம் இந்த உலகில் யாருக்கும் இல்லை மகனே. அவன் உடல் இன்னமும் இயங்கிக்கொண்டுதான் இருக்கிறது. மூளை செத்துவிட்டது என்றால் இதயமும் இயங்காது, மூச்சும் செல்லாது. இயற்கை அடுத்த நொடியில் ஒளித்துவைத்திருக்கும் ரகசியம் யாருக்கும் தெரியாது, அதனால் காத்திரு..."

"என் மகன் பிழைத்துவிடுவான் என்கிறீர்களா..?"

"பிழைக்கலாம் அல்லது பிழைக்காமல் போகலாம். ஆனால், அவனை நீ கொல்ல வேண்டாமே...'

"இதே நிலையில் வைத்து கவனித்துக்கொள்ள எக்கச்சக்க பணம் வேண்டும் என்கிறார்கள். அவனால் ஏழெட்டு உயிர் பிழைக்கும் என்கிறார்கள்..."

"நல்லது, வேறு எவருடைய உடல் உறுப்புகளை யாவது உன் மகனுக்கு பொருத்தி அவனை உயிர்ப்பிக்கச் சொல். அதுதான் ஒரு நல்ல மருத்துவர் செய்யவேண்டிய கடமை. உயிரோடு இருக்கும் ஒருவனை கொல்ல நினைக்காதே... நீ வாழ்நாள் முழுவதும் அவஸ்தைப்படுவாய்... மருத்துவர்களின் வியாபாரத்துக்கும் அவசரத்துக்கும் துணை போகாதே..'' தெளிவான முடிவுடன் தம்பதியர் கிளம்பினார்கள்.


www.gyanaguru.com



# ஒரு முறைதான் வருமா காதல்

உச்சி வெயிலின் கொடுமையை கண்டுகொள்ளாமல், பீச் மணலின் வெப்பத்தை பொருட்படுத்தாமல், உப்புக்காற்றின் கசகசப்பை மதிக்காமல், கடல் அலைகளை ரசிப்பதுபோல், உரசி உட்கார்ந்து சில ஜோடிகள் காதலிப்பதை பார்த்திருப்பாய். அந்த ஜோடிகளுக்கு அது புனிதமான காதலாக இருக்கலாம். ஆனால், அவர்களை பார்க்கும் மற்றவர்களுக்கு, அது தினவெடுத்த காதலாக தெரியும். ஏனென்றால் அடுத்தவர் காதல் என்றால் எல்லோருக்குமே இளப்பம்தான்.

அப்படியென்றால் சஹானாவுடைய காதல் எப்படிப்பட்டது?

பக்கத்துவீட்டு ராஜசேகரனை உயிருக்கு உயிராக காதலித்தாள் சஹானா. வெவ்வேறு மதம் என்றாலும், அதைப் பற்றிய கவலையும் பயமும் அவளுக்கு இல்லை. அவள் உறுதியைக் கண்டு பிரமித்துத்தான் ராஜசேகரும் காதலுக்கு சம்மதித்தான். இருவரும் நல்லபடியாக காதல் செய்தார்கள், எதிர்காலம் குறித்து நிறைய கனவுகள் வளர்த்தார்கள். குடும்பத்தாருக்கு விஷயம் தெரியவந்தால் நிச்சயம் பூகம்பம் வெடிக்கும் என்று தெரிந்தும் காதலித்தார்கள். அவர்கள் நினைத்தபடியே நடந்தது. இருவர் வீட்டிலும் காதலுக்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. ஆனால் இருவரும் விட்டுக்கொடுக்காமல் உறுதியாக நின்றார்கள்.

வெட்டிப்போடுவேனே தவிர, ராஜசேகரனுக்கு கட்டித்தர மாட்டேன் என்று சஹானா வீட்டில் பிடிவாதமாக சொன்னார்கள்.


www.gyanaguru.com



# ஒரு முறைதான் வருமா காதல்

நீ சொன்னதை ராஜசேகரன் கொஞ்சமும் மதிக்கவே இல்லை, நீ அவனுக்காக குடும்பத்தை எதிர்த்து காதல் செய்தாய், ஆனால் அவனுக்கோ உன் மீது காதல் இல்லை என்று சிலர் சஹானாவை தூண்டிவிட்டார்கள்.

அதேநேரம் ராஜசேகரனுக்கு அவசரமாக சொந்தத்தில் திருமணம் முடிக்க ஏற்பாடுகள் நடந்தன. ஆனால், இருவரும் காதல் பிடிவாதத்தில் இருந்தார்கள். காதல் தவிர வேறு எந்த சமாதானத்தையும் ஏற்க மறுத்தார்கள். ஒரு வருடம் கடந்தது. இவர்களது காதலை பெற்றோர்களால் கரைக்க முடியவில்லை. காதலர்களின் உறுதி பெற்றோர்களை தோல்வி அடையச்செய்தது. அதனால் சிம்பிளாக திருமணம் செய்துவைப்போம் என்று இரண்டு வீட்டாரும் முடிவுக்கு வந்தார்கள். அடுத்த மாதத்தில் திருமணம் முடித்துவிடலாம் என்று தேதி குறித்தார்கள்.

அந்த நேரத்தில் ராஜசேகருக்கு பதவி உயர்வு கிடைத்தது. அவசரமாக ஆறு மாத பயணமாக வெளிநாடு செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனால் ஆறு மாதங்கள் கழித்து திருமணம் வைத்துக்கொள்ளலாம் என்றான் ராஜசேகர். பெற்றோர் இத்தனை தூரம் இறங்கிவந்திருக்கும் நிலையில், திருமணத்தை தள்ளிப்போடுவது சரியில்லை. திருமணத்தை முடித்துவிட்டு வெளிநாடு போகலாம் என்று சொன்னாள் சஹானா. அவசர அவசரமாக திருமணம் முடிக்கவேண்டாம், வெளிநாடு போய்வந்ததும் சிறப்பாக நடத்துவோம் என்று சமாதானம் சொன்னான் ராஜசேகரன்.

நீ சொன்னதை ராஜசேகரன் கொஞ்சமும் மதிக்கவே இல்லை, நீ அவனுக்காக குடும்பத்தை எதிர்த்து காதல் செய்தாய், ஆனால் அவனுக்கோ உன் மீது காதல் இல்லை என்று சிலர் சஹானாவை தூண்டிவிட்டார்கள்.

அதனால் ஆத்திரமானாள் சஹானா. நான் வேண்டுமா அல்லது வேலை வேண்டுமா என்று முடிவாக கேட்டாள். அதுவரையிலும் சஹானாவிடம் இப்படியொரு ஆவேசத்தை ராஜசேகரன் பார்த்ததே இல்லை. யோசித்து சொல்கிறேன் என்று மிரட்சியுடன் நகர்ந்துவிட்டான். பதில் கிடைக்காத கோபத்தில் எரிச்சலானாள் சஹானா. கோபம் கண்களை மறைக்கவே, வேகவேகமாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு தூக்கில் தொங்கிவிட்டாள். அவள் மரணத்திற்கு காரணம் என்று ராஜசேகரனை போலீஸ் கைது செய்து சிறையில் தள்ளிவிட்டது.

மேலோட்டமாக பார்த்தால் சஹானா தீவிரமாக காதலித்தவள் போலவும் ராஜசேகரன் ஏமாற்றியதாகவும் தெரியும். உண்மையான காதலி என்றால்… ராஜசேகரனை வாழ்த்தி வழியனுப்பியிருக்க வேண்டும் சஹானா. அவள் வேண்டாம் என்றாலும் சிம்பிள் கல்யாணமாவது முடிந்தபிறகுதான் போவேன் என்று அடம் பிடித்திருக்க வேண்டும் ராஜசேகரன். ஆனால் இருவருக்குமே காதல் பற்றிய புரிதல் இல்லை. அதனால்தான் இவர்களது காதல் தோற்றுப்போனது.

ஒவ்வொரு நொடியும் மனிதன் மாறிக்கொண்டே இருக்கிறான் என்பதுதான் அறிவியல் உண்மை. உடல், செயல், சிந்தனை, அறிவு, ஆற்றல், ஆசை போன்ற எல்லாமே தினமும் மாறிக்கொண்டே இருக்கும். இதனை காதலர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நேற்றுப்போல் நீ இன்று இல்லை என்பதுதான் பெரும்பாலான காதல் முறிவுக்குக் காரணம். நேற்றுப்போல் இன்றும் இருந்தால் அவன் மனிதன் இல்லை, கல். இந்த உண்மை புரியாமல்தான், நம்பி மோசம் போய்விட்டேன் என்று பிரிகிறார்கள், தற்கொலை செய்கிறார்கள், சிலர் கொலையும் செய்கிறார்கள்.

**மந்திரச்சொல்**

"நேற்றைய கசப்புகளை இன்று நீ மறக்காவிட்டால், நாளைய தினமும் கசப்பாகவே விடியும்."



**உண்மையில் காதல் என்பது என்ன?**

தாய் தரும் அன்பை, வேறு ஒரு பெண்ணிடம் ஆண் தேடுவது காதல். அதேபோல் தந்தை தரும் பாதுகாப்பை வேறு ஒரு ஆணிடம் தேடுகிறாள் பெண். பெற்றோர்களால் காலம் முழுவதும் காவல் இருக்கமுடியாது என்பதால் இயற்கை ஏற்படுத்தியிருக்கும் விளையாட்டுதான் காதல்.

**காதல் என்பது ஹார்மோன் அரிப்பு என்கிறார்களே?**

காதல் மட்டுமல்ல, மனிதனின் ஒவ்வொரு செயலுக்கும் காரணம் ஹார்மோன்தான். படிப்பது, வேலை செய்வது, சண்டை போடுவது, ஊர் சுற்றுவது, சந்தோஷமாக இருப்பது தற்கொலை போன்ற எல்லாமே ஹார்மோன் சமாச்சாரம்தான்.

**காதல் அவசியம்தானா… காதல் திருமணத்தை தடை செய்துவிடலாமே?**

மற்ற ஜீவராசிகளிடம் இருந்து மனிதன் மாறுபட்டு வாழ்வதற்கு வழிவகை செய்வது காதல்தான். விலங்கு, பறவைகளின் காதல் இனப்பெருக்கத்திற்கு மட்டுமே. மனிதனின் காதல் மட்டும்தான் வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது. காதல்தான் மனிதனை குடும்பமாக இயங்கவைக்கிறது. காதல்தான் மனிதனை செம்மைப்படுத்தி சாதனைகள் செய்யத்தூண்டுகிறது. அதனால் மனிதகுலம் தோன்றிய காலம் முதல் இருந்துவரும் காதலுக்கு தடைபோட எந்த ஒரு சக்தியாலும் முடியாது. காற்றைப் போல் காதல் எங்கேயும் எப்போதும் சுற்றிக்கொண்டே இருக்கும்.

**காதலில் ஜெயிப்பதற்கு எளிய வழிகள் இருக்கின்றனவா?**

காதலுக்கான தகுதிகளை வளர்த்துக்கொண்டு காதல் செய்தால் நிச்சயம் வெற்றி பெறலாம். ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனி வருமானம் இருப்பது காதலின் முதல் தகுதி. இருவருக்கும் நல்ல உடல் நலம் வேண்டும். ஒருவர் வழியில் மற்றவர் குறுக்கிடாத சுதந்திரம் வேண்டும். நான் வெற்றியடைவதைவிட, நான் விரும்புபவர் வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணம் இருவருக்கும் இருக்கவேண்டும். சுருக்கமாக சொல்வது என்றால் பிறருக்காக வாழ்தலே காதல்.

**காதலின் முடிவு திருமணம்தானே..?**

காதலின் முடிவும் காதல்தான். திருமணத்தில் முடிவதுதான் உண்மை யான காதல் என்ற எண்ணம்தான் காதல் பற்றிய தவறான புரிதலை உண்டாக்குகிறது. காதலர்கள் பிரிந்து, வெவ்வேறு வழியில் சென்றால்தான் வெற்றியடைய முடியும் என்று தோன்றினால், அப்படி பிரிவதும் காதலே. தங்கள் காதலால் சிலருக்கு துன்பம் ஏற்படலாம் என்ற காரணத்தால் பிரிவதும் உண்மையான காதலே. திருமணத்தில் காதல் முடிகிறது என்ற எண்ணம்தான் ஏகப்பட்ட விவாகரத்துக்கு காரணமாக இருக்கிறது. காதல் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்துகொண்டே இருக்கவேண்டும்.

**வாழ்நாளில் ஒரு முறைதான் காதல் வருமா?**

மரங்கள் காலம் முழுவதும் பூத்துக்கொண்டே இருப்பதைபோல் காலம் முழுவதும் காதல் வந்துகொண்டே இருக்கும். முதல் காதல் மறக்கமுடியாததாக இருக்கலாம். சேரமுடியாத காதல் தெய்வீகமாக தெரியலாம். உண்மையில் காதல் என்பதும் கடவுள் என்பதும் வேறல்ல. கடவுளால் உலகில் உள்ள அத்தனை பேரையும் காக்கமுடியும் என்றால் உன்னால் அத்தனை பேரையும் காதலிக்க முடியும். எனக்கு மட்டுமே காதல் சொந்தம் என்று சுருக்குவதுதான் ஆபத்து. பழி வாங்குவதும், ஆசிட் வீசுவதும் சுயநல காதல். சேர்ந்து தற்கொலை செய்வது முட்டாள்தனம். காதல் தோல்விக்காக தாடி வளர்ப்பதும், ஓடிப்போவதும் முதிர்ச்சியின்மை.

**ஒரே வார்த்தையில் காதல் என்பது…?**

விட்டுக்கொடுத்தல்.

# நஷ்டம் நஷ்டம் மேலும் நஷ்டம்

புதிய முயற்சிகள் என்றால் அதற்கு உதாரணமாக நாகராஜனைக் காட்டலாம். ஆம், அவர் செய்யாத தொழில் முயற்சி எதுவுமே இல்லை. அதாவது, அவர் செய்யாத தொழில் என்று எதுவுமே இல்லை. மரக்கடை, டீக்கடை, பலசரக்குக்கடை, மாவு மெஷின், லாரி டிரான்ஸ்போர்ட் என்று கண்ணுக்குத் தென்பட்ட தொழில் எல்லாம் செய்து பார்த்தார். ஆனால், அவருக்கு மட்டும் வெற்றி கிடைக்கவே இல்லை. அதற்கு தன்னுடைய தலையெழுத்துத்தான் காரணமா என்று ஞானகுருவிடம் கேட்க வந்தார். எல்லா முயற்சிகளிலும் தோற்றுப்போன கையாலாகத்தனம் அவரிடம் தென்பட்டது.

எப்படியெல்லாம் சிரமப்பட்டேன். எத்தனை முயற்சிகள் செய்தேன் என்று ஞானகுருவிடம் விலாவாரியாக பேசி, எனக்கு மட்டும் ஏன் எல்லா தொழிலிலும் நஷ்டம் என்று கேட்டார்.

உனக்கு கிரிக்கெட் விளையாடுவதற்குத் தெரியும் என்று வைத்துக்கொள். அதில் டக் அவுட் ஆகிவிட்டாய் என்றதும், கைப்பந்து விளையாடப் போய்விடுவாயா..? அப்படியே போனாலும், அதில் உனக்கு உடனே வெற்றி கிடைத்துவிடுமா?

என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது புரியவில்லையே..?

உனக்கு எந்த தொழில் மீது ஆர்வமோ அந்த தொழிலில் மட்டும் இறங்கு. அதில் தோல்வி அடைந்தால், ஏன் தோல்வி கிடைத்தது என்பதைக் கண்டறிந்து, அந்த குறையை நிவர்த்தி செய்து மீண்டும் அதிலேயே இறங்கு. அதன்பிறகும் தோல்வி வந்தால், அதுபோன்று தோல்விகள் மீண்டும் வராமல் இருக்க என்ன செய்யவேண்டும் என்று யூகித்து நன்றாக முடிவெடுத்து மீண்டும் அதே தொழிலில் இறங்கு. அப்போதுதான் வெற்றி கிடைக்கும்.

உலகில் எல்லா தொழிலும் வெற்றிகரமானதுதான். மரக்கடை, டீக்கடை, பலசரக்குக்கடைகளை வெற்றிகரமாக நடத்துபவர் யாருமே இல்லையா..? அவற்றை நடத்தத் தெரியவில்லை என்றால், சூட்சுமத்தை அறியும் வரை அதிலேயே இரு. ஒரு நாள் வெற்றி நிச்சயம் உன் கைக்கும் வந்து சேரும் என்றதும், தெளிவான மனதுடன் கிளம்பிப் போனார் நாகராஜன்.



# கனவை நிறுத்து... ஆசையை விரட்டு!

கல்லூரி படிப்பை முடித்த மோனிகாவை பேரழகி என்று சொல்லமுடியாது என்றாலும் அழகிதான். நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவள். திருமணத்துக்கு நகை சேர்க்கவேண்டிய கட்டாயத்தில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தாள். அங்கு ராஜேஷை சந்தித்தாள். மோனிகா வேலை பார்க்கும் நிறுவனத்தில், அமெரிக்க கிளைக்கு பொறுப்பாளனாக இருந்தான். இந்தியாவுக்கு வரும் நேரத்தில் எல்லாம் மோனிகாவின் அமைதியான குணத்தையும் அவளது மோனலிசா புன்னகையையும் பார்த்து மயங்கினான்.

ஒரு சுபயோக சுபதினத்தில் மோனிகாவை தனிமையில் சந்தித்தான் ராஜேஷ். உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது, திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன். உனக்கு அமெரிக்கா வருவதற்கு விருப்பம் இருந்தால் சொல், நான் என் பெற்றோரிடம் பேசி மேற்கொண்டு நடக்கவேண்டியதை கவனிக்கிறேன். என் பெற்றோர் சம்மதம் கிடைக்கும்வரை நம் விஷயத்தை யாரிடமும் தகவல் தெரிவிக்க வேண்டாம் என்று சொன்னான். மறுபேச்சு பேசாமல் சந்தோஷமாக தலையை ஆட்டினாள் மோனிகா.

அடுத்த நிமிடம் முதல் மோனிகா கனவு காணத்தொடங்கினாள். அமெரிக்காவுக்கு செல்வது போலவும், பனி மழையில் நனைவதாகவும், தோழிகள் பொறாமைப்படுவதாகவும் நினைத்துப் பார்த்தாள். ஒவ்வொரு நிமிடமும் கனவில் வாழ்ந்தாள். தனியே சிரித்தாள். தனக்குள் பேசினாள். பணத்தில் மிதப்பதாகவும் சொர்க்கத்தில் வாழ்வதாகவும் கனவு கண்டாள். இந்த மாற்றத்தைக் கண்ட மோனிகாவின் பெற்றோர், என்னமோ நடக்கிறது என்று யோசித்தார்கள். உடனே தூரத்து சொந்தத்தில் ஒரு வரனை பேசிமுடிக்கும் வேலையில் இறங்கினார்கள்.

அடுத்த மாதம் அமெரிக்காவில் இருந்துவந்த ராஜேஷ், மோனிகாவைப் பார்த்து புன்னகை செய்யவும் யோசித்தான். கஷ்டப்பட்டு ஒரு தனிமையை உருவாக்கி ராஜேஷை சந்தித்தாள் மோனிகா. முதலில் தயங்கினாலும் தெளிவாகப் பேசினான் ராஜேஷ்.

www.gyanaguru.com





www.gyanaguru.com

உன்னை திருமணம் முடிப்பது குறித்து என் பெற்றோரிடம் பேசினேன். உன் குடும்பத்தைப் பற்றி விசாரித்தார்கள். சாதாரண நடுத்தரக் குடும்பம் என்பதால் ஒரேயடியாக நிராகரித்து விட்டார்கள். என் பெற்றோர் பேச்சை என்னால் தட்டமுடியாது. அதனால் இனிமேல் என்னை சந்திக்க வேண்டாம். நாம் இனி அலுவலக தோழர்களாக மட்டுமே இருப்போம் - என்று பொறுமையாக சொல்லிவிட்டு விலகினான்.

அதிர்ச்சி அடைந்தாள் மோனிகா. உலகமே தன் தலையில் இடிந்து விழுந்ததாக உணர்ந்தாள். இந்த நேரத்தில் மாப்பிள்ளையாக அறிமுகம் செய்யப்பட்டான் வேல்ராஜன். ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் சொந்தமாக சிறிய ஹோட்டல் நடத்தி வந்தான். மோனிகாவின் தோற்றத்தைக் கண்டதும் நகை எதுவும் போடவேண்டாம் என்று சொல்லி திருமணத்துக்கு சம்மதித்துவிட்டான். கல்யாணத்தை தடுக்கும் சூழலில் மோனிகா இல்லை என்பதால் சிம்பிளாக விரைவில் கல்யாணம் நடந்துமுடிந்தது.

மிகவும் நல்லவனாக இருந்தான் வேல்ராஜன். மோனிகாவை தங்கத் தட்டில் வைத்துத் தாங்கினான். ஆனால் மோனிகாவுக்கு இந்த வாழ்க்கை அவமா னமாகத் தெரிந்தது. அமெரிக்காவில் வாழவேண்டிய தன்னை ஒரு குருவிக்கூட்டில் அடைத்து வைத்திருப்பதாக உணர்ந்தாள்.

மிகவும் நல்லவனாக இருந்தான் வேல்ராஜன். மோனிகாவை தங்கத்தட்டில் வைத்துத் தாங்கினான். ஆனால் மோனிகாவுக்கு இந்த வாழ்க்கை அவமானமாகத் தெரிந்தது. அமெரிக்காவில் வாழவேண்டிய தன்னை ஒரு குருவிக்கூட்டில் அடைத்து வைத்திருப்பதாக உணர்ந்தாள். வேல்ராஜன் தனக்கு தகுதியானவன் இல்லை என்று ஆணித்தரமாக நம்பினாள். அதனால் அவனை கண்டுகொள்ளாமல் இருந்தாள். அவன் நெருங்கி வந்தாலும் விலகிப் போனாள். மீண்டும் மீண்டும் ஆசையுடன் மோனிகாவை நெருங்கிய வேல்ராஜிடம் ஒரு நாள் உறுதியான குரலில் பேசினாள். என்னுடைய அழகுக்கு நான் அமெரிக்காவில் வாழவேண்டியவள். எனக்கு உங்களுடன் வாழ விருப்பம் இல்லை என்று சொன்னாள். வேல்ராஜன் மறுபேச்சு பேசவில்லை. மோனிகாவை உடனடியாக அவளது அம்மா வீட்டுக்கு அனுப்பிவிட்டான்.

இப்போது மோனிகா வேறு ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறாள். வேல்ராஜனுடன் திருமணம் முடிந்ததை ஒரு கெட்ட கனவாக நினைக்கிறாள். தன்னை அமெரிக்காவுக்கு கூட்டிச்செல்ல ஒரு இந்திரனோ, சுந்திரனோ வருவான் என்று கனவு காண்கிறாள். ஆனால் அந்த கனவு இன்னமும் நிறைவேறவில்லை என்பதால் எரிச்சலும் கவலையுமாக வாழ்க்கையை நகர்த்துகிறாள். மோனிகாவை வேல்ராஜனுடன் சேர்த்துவைக்க எடுக்கும் முயற்சிகள் தோற்றுப் போனதால், அவள் குடும்பமும் கவலையுடன் வாழ்கிறது. தங்கள் கவலைக்கு என்ன காரணம் என்பது புரியாமல் கவலைப்படுகிறார்கள்.

### மோனிகாவின் கவலைக்கு காரணம் தெரிகிறதா?

கனவு உலகத்தில் வாழ்ந்ததுதான் மோனிகாவுக்கு கவலை தருகிறது. தான் கண்டது கனவு என்பதை உணராமல் இன்னமும் கனவில் வாழ்கிறாள். அந்த கனவை ஆனந்தமாக ரசிக்கிறாள். அவள் எப்போது கனவை வெறுக்கிறாளோ அப்போதுதான் கவலையில் இருந்து வெளிவர முடியும்.

### மோனிகாவின் குடும்பத்தினர் கவலைக்கு காரணம் என்ன?

அவர்களும் ஒரு கனவு கண்டார்கள். தாங்கள் சொல்லும்







மாப்பிள்ளையுடன் மோனிகா சந்தோஷமாக வாழ்வாள் என்று நினைத்தார்கள். கணவனை மதித்து திறமையாக குடும்பம் நடத்துவாள் என்று கனவு கண்டார்கள். அந்த கனவு உடைந்து போனதால் கவலைப்படுகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல வேல்ராஜனும் ஒரு கனவு கண்டான். மோனிகா போன்ற அழகி தனக்கு மனைவியாக வந்தால், வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்று கனவு கண்டான். ஆனால் வேல்ராஜன் புத்திசாலி. கவலையை அருகில் வைத்திராமல் விரட்டிவிட்டான். வேலையில் மூழ்கிவிட்டதால் கனவையும் கவலையையும் மறந்துவிட்டான்

புரமோசன் கிடைக்கும் என்று கனவு காண்பவன், அடுத்து கார் வாங்குவது போலவும், புது வீடு கட்டுவதாகவும் நினைத்துப் பார்க்கிறான். புரமோசன் கிடைக்கவில்லை என்றதும் மாபெரும் கவலையில் விழுகிறான். அதேநேரம் புரமோசன் பற்றி எந்த கனவும் இல்லாத ஒருவனுக்கு, புரமோசன் கிடைக்கவில்லை என்றாலும் எந்த கவலையும் வருவதில்லை. அதனால் கனவை நிறுத்து.

### கவலையில் இருந்து வெளிவர என்ன செய்யவேண்டும்?

தூக்கத்தில் காணும் கனவை யாரும் பெரிதாக நினைப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால் அப்படியொரு கனவு கண்டதை யாரும் நினைவு வைத்திருப்பதில்லை. அதேபோன்று வாழ்க்கையில் காணும் கனவுகளில் இருந்தும் முற்றிலுமாக வெளிவர வேண்டும். கனவை உடைத்து வெளியேறிவிட்டால் கவலை நிச்சயம் காணாமல் போய்விடும்.

### கனவை உடைக்க முடியுமா?

கனவு இனிமையாக இருப்பதால் சிலருக்கு உடைப்பதற்கு மனம் வருவதில்லை. புண்ணை குத்தி வேதனையில் இன்பம் காண்பதுபோல் கனவிலேயே வாழ்கிறார்கள். தங்கள் கவலைக்கு உண்மையான காரணம், தாங்கள் கண்ட கனவு என்ற உண்மை புரியவேண்டும். ஒரு சினிமாவைப் பார்த்ததும் அந்த நாயகன் அல்லது நாயகியுடன் வாழவேண்டும் என்ற கனவு வருவது சகஜம். ஆனால் அது நடக்காது என்பது நிச்சயம் தெரியும். அதனால் அந்த கனவை உடைத்து வெளிவந்துவிடுவாய். அதுபோல் இப்போதைய கவலைக்குக் காரணமாக கனவில் இருந்தும் வெளிவர வேண்டும். கனவில் இருந்து வெளிவருவதற்காக தனிமையில் தவிப்பது, குடிப்பது, அழுவது போன்றவை நிரந்தர தீர்வு தராது. கவலைக்கு என்ன காரணம் என்று யோசித்து யோசித்து ஒரு தாளில் எழுது. அதை மீண்டும் மீண்டும் படித்துப் பார். அவைதான் கவலைக்குக் காரணம் என்பது உறுதியானதும் நிதானமாக அதனை நெருப்பில் போடு. கனவும் கவலையும் சேர்ந்தே கருகிப்போகும்.

உடைக்கவே முடியாத கனவென்று எதுவும் இல்லை!

# அசைவம்

## சாப்பிடலாமா..?



மரத்தடியில் தேமே என்று படுத்துக்கிடந்த ஞானகுருவை நோக்கி வண்டியில் வந்த இளைஞன் ஒருவன், ஒரு சாப்பாட்டு பொட்டலத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான். ஞானகுருவின் அருகே, பழனிக்கு பாதயாத்திரை செல்லும் சில பக்தர்கள் படுத்திருந்தனர். அவர்களுக்கும் பொட்டலத்தைக் கொடுத்தான்.

மற்றவர்கள் அவசரம் அவசரமாக பிரித்து சாப்பிடத் தொடங்கினார்கள். அவர்கள் பொட்டலத்தில் இருந்த தயிர் சாதத்தை அவசரம் அவசரமாக விழுங்கினார்கள். ‘‘சாமி நீங்க சாப்பிடலையா..?” ஒருவர் கேட்டதும் வெறுமனே சிரித்து வைத்தார்.

‘‘அவருக்கு தயிர் சாதம் வேண்டாமாம்... பிரியாணிதான் பிடிக்குமாம்..” ஒருவன் சொல்லிவிட்டு பலமாக சிரித்தான்.

”ஏன்... நீ பிரியாணி சாப்பிடமாட்டாயா..?”

‘‘இல்ல சாமி. நாங்க சுத்த சைவம்... என்ன இருந்தாலும் உயிரைக் கொன்னு சாப்பிடுறது பாவமில்லையா சாமி... அதனாலதான்!” என்றான் பெருமையுடன்.

”அப்படின்னா... தாவரத்துக்கு உயிர் இல்லையா?” கேள்விக்கு பதில் சொல்ல விரும்பாமல் அமைதி காத்தார்கள். ‘‘நான் எது கிடைத்தாலும் சாப்பிடுவேன்... அசைவத்தையும் நான் ஒதுக்குவதில்லை...” என்றார் ஞானகுரு.

”சாமி தப்பா நினைக்காதீங்க... உலகத்தையே வெறுத்த உங்களால் அசைவத்தை ஒதுக்க முடியவில்லையா?” ஒருவன் முன்வந்து கேட்டான்.

”உலகத்தை நான் வெறுத்ததாக யார் சொன்னது, இந்த உலகம் மிகவும் பிடித்திருப்பதால்தான் சந்தோஷமாக சுற்றிக்கொண்டு இருக்கிறேன், அசைவத்தை ஏன் ஒதுக்க வேண்டும். அதுவும் உணவுதானே..!”

“ஒரு கொத்தமல்லிச் செடியை வேரோடு புடுங்கி, தண்ணீரில் நனைத்து அப்படியே அம்மியில் வைத்து உப்பு, புளி, மிளகாய் சேர்த்து நசுக்கித் துவையலாக்குவது பாவமில்லை என்றால் கோழியைக் கொன்று தின்பதும், மீனை வறுத்து உண்பதும் பாவமில்லைதான்”

**”உயிர்க் கொலை பாவமில்லையா?”**

”ஏதாவது ஒன்றை தின்று வாழும்படிதான் எல்லா உயிரினங்களும் படைக்கப்பட்டுள்ளன. பயிராகவும் இருக்கலாம், உயிராகவும் இருக்கலாம். எது கிடைக்கிறதோ, எது பிடிக்கிறதோ அதை சாப்பிட வேண்டியதுதான். ஏன்... கடவுளே பிள்ளைக்கறி சாப்பிட்டவர்தானே!”

**”அசைவம் சாப்பிடாமலும் வாழ முடியும் எனும்போது, எதற்காக இன்னொரு உயிரை உணவுக்காக கொல்ல வேண்டும்?”**

”மனிதன் மாமிசபட்சனிதான். மாமிசம் கிடைக்காத நேரத்தில் அல்லது பிடிக்காத பொழுதில்தான் தானாக விளைந்து கிடைத்த காய், கனிகளை உட்கொண்டான். வேட்டையாட முடியாதவர்கள் நிரந்தரமாக இயற்கை உணவை கடைப்பிடித்தார்கள். மனித குலத்தில் தோன்றிய முதல் பிரிவே உணவில்தான் ஏற்பட்டது. உடல் வலிமை காட்டி ஜெயிக்க முடியாத தாவர உணவாளர்கள், அவர்களது உணவுப் பழக்கத்தை உயர்த்திக் காட்டி சிறப்பிடம் பிடிக்க முயன்றார்கள். உயிர்கள் மீதான பாசத்தினால், தாவர உணவு சாப்பிடுவதாகச் சொல்லி தங்களை உயர்த்திக் கொண்டார்கள். உண்மையில் உணவு என்பது ஒரு பழக்கம்தானே தவிர, அதில் உயர்வும் இல்லை, இகழ்ச்சியும் இல்லை...”

**”அப்படி என்றால் உயிர்களைக் கொல்வது பாவமில்லை என்று சொல்கிறீர்களா?”**

”ஒரு கொத்தமல்லிச் செடியை வேரோடு புடுங்கி, தண்ணீரில் நனைத்து அப்படியே அம்மியில் வைத்து உப்பு, புளி, மிளகாய் சேர்த்து நசுக்கித் துவையலாக்குவது பாவமில்லை என்றால் கோழியைக் கொன்று தின்பதும், மீனை வறுத்து உண்பதும் பாவமில்லைதான்”

**”என்ன இருந்தாலும் தாவரங்கள் மனிதனுக்காக வளர்பவை, வளர்க்கப்படுபவை... இல்லையா?”**

”இந்த உலகில் வாழ மனிதனுக்கு எத்தனை உரிமை இருக்கிறதோ, அத்தனை உரிமை ஒவ்வொரு தாவரத்துக்கும் இருக்கிறது. நீங்களே வளர்த்ததாக இருந்தாலும், ஒரு பயிரை அழிக்க உங்களுக்கு உரிமை இருப்பதாக எப்படி நினைத்துக் கொள்கிறீர்கள்? தன் வலி, வேதனையை வெளிப்படுத்த முடியாத உயிரினமாக பயிர்கள் இருப்பதால், அதனை சாப்பிட்டால் பாவமில்லை என நீங்களாகவே நினைத்துக் கொள்கிறீர்கள்... அப்படித்தானே?”

**”ஆனால், நமது மதம் சைவ உணவைத்தானே ஆதரிக்கிறது?”**

”யார் அப்படிச் சொன்னது? அசைவத்திற்கு தடை போட்ட காரணத்தாலே சமண மதமும், புத்த மதமும் தளைத்து வளர முடியவில்லை. இந்து மதம் இரண்டையும் ஏற்றுக் கொண்டது. கிடா வெட்டி படைப்பதும் இந்து கடவுள்களுக்குத்தானே. கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்கள் அசைவ உணவை அத்தியாவசியமாகவே மாற்றிவிட்டன. சைவ உணவுப் பழக்கமே உயர்ந்தது என்ற கர்வம் ஒருவருக்கு எழுந்துவிட்டால், அது ஒரு உயிரைக் கொன்றதைவிட கொடிய பாவம்...”

**”மனசைக் கட்டுப்படுத்த முடியாமல், இப்படி சாக்குபோக்கு சொல்றீங்க சாமி..?”**

”இந்த ஆயுதத்தை எறிந்துதான் சைவம் சாப்பிடுவது உயர்வானது, அசைவம் பாவகரமானது என்று நம்ப வைக்கிறார்கள். கொசு, கரப்பான் பூச்சி, எலி போன்ற உயிரினங்கள் வீட்டுக்குள் நுழைந்துவிட்டால், சைவ உணவாளர்கள் எத்தனை அன்புடன் அவற்றை நடத்துகிறார்கள் தெரியுமா? யாருக்கும் தெரியாமல் அசைவம் சாப்பிடுவது, உணவு பழக்கத்தை மறைப்பது எனக்குப் பிடிக்காது. எனக்கு பிடித்ததை சாப்பிடுகிறேன் அவ்வளவுதான். அசைவம் சாப்பிட்டால் 10 மணி நேரம் வேறு எதுவும் சாப்பிடத் தேவையில்லை என்பது தெரியுமா? பசிக்கும்போது மட்டும் சாப்பிடு. என்ன உணவு என்பதில் கவனம் செலுத்தாதே...” அமைதிக்குப் போனார் ஞானகுரு.

www.gyanaguru.com





www.gyanaguru.com



# வெற்றிக்குத் தேவை, பறவையின் பார்வை..!

பார்வை குறுகலாக இருப்பவருக்கு, வெற்றி எளிதாக கிடைக்காது. குதிரைக்கு கடிவாளம் போட்டது போல் குறுகலான பார்வையுடன் பயணிப்பவர்கள், அக்கம் பக்கம் நடப்பதை அறியாமல், இடறிவிழுந்து தோல்வியைத் தழுவுவார்கள் என்பதற்காக சொல்லப்படும் இந்தக் கதையை கேள்விப்பட்டிருப்பீர்கள்.

வாழ்க்கையில் கடினமாக உழைத்து சிரமப்பட்டு முன்னுக்கு வந்தவன் பிரசன்னா. தன்னுடைய சேமிப்புகளை எல்லாம் ஒன்றுதிரட்டி புத்தம் புதிய கார் ஒன்றை வாங்கிவந்தான். அந்தக் கார் மீது மிகவும் அன்பை பொழிந்தான். மிகவும் பாதுகாப்பாக வைத்திருந்தான்.

பிரசன்னாவின் மகன் குட்டிப்பையன் விகேஷுக்கும் அந்த கார் ரொம்பவும் பிடித்திருந்தது. அதனை சுற்றி விளையாடிக்கொண்டே இருந்தான். அன்று ஞாயிற்றுக்கிழமை. காரை கழுவி முடித்து, வீட்டு வாசலில் ஓய்வு எடுத்துக்கொண்டு இருந்தான் பிரசன்னா. காருக்குப் பின்னே விளையாடிக்கொண்டு இருந்தான் விகேஷ். திடீரென ஏதோ வித்தியாசமாக சப்தம் வரவே நிதானமாக எழுந்து காருக்குப் பின்னே எட்டிப் பார்த்தான் பிரசன்னா. அங்கே கண்ட காட்சி பிரசன்னாவுக்கு பெரும் ஆத்திரத்தை உருவாக்கிவிட்டது. ஆம், கீழே கிடந்த ஆணியை எடுத்து காரின் பின்பக்கம் எதையோ கிறுக்கிக் கொண்டு இருந்தான் விகேஷ். உடனே கையில் கிடைத்த குச்சியை எடுத்து விளாசுவிளாசு என்று அடித்து தீர்த்துவிட்டான்.

கதறி அழுத விகேஷை, அவன் மனைவி தூக்கிச்சென்ற பிறகுதான் பிரசன்னாவின் கோபம் தணிந்தது. காரில் எந்த அளவுக்கு கிறுக்கியிருக்கிறான் என்பதை அருகே சென்று பார்த்த பிரசன்னாவுக்கு, இப்போது மீண்டும் ஓர் அதிர்ச்சி.

ஆம், அந்த காரில் ஐ லவ் யூ டாடி என்று குழந்தைத்தனமாக

www.gyanaguru.com

www.gyanaguru.com

கிறுக்கியிருந்தான் விகேஷ். தன் மீதான அன்பை, குழந்தை மொழியில் சொல்லியிருந்த மகனை தண்டித்துவிட்ட கொடுமைக்காக வேதனைப்பட்டான் பிரசன்னா. மகனுக்கு ஆறுதல் சொல்வதற்கு அருகே சென்றவனைக் கண்டு அலறி நடுங்கினான். தப்பு செய்துவிட்ட குற்றவுணர்ச்சியில் கூனிக்குறுகிவிட்டான் பிரசன்னா. சிறுவன் என்றதும் கண்டிப்பாக காரை சேதம் செய்திருப்பான் என்ற குறுகிய கண்ணோட்டத்தில் மகனை பார்த்ததுதான் பிரசன்னாவின் தவறு. அவன் என்ன செய்கிறான் என்று பாசத்துடன் எட்டிப் பார்த்திருந்தால், மகனின் பாசத்தை கொண்டாடி இருக்கலாம். இந்த உலகத்திலேயே சந்தோஷமான அப்பாவாக மாறியிருப்பான் பிரசன்னா.

ஆனால் பெரும்பாலான நேரங்களில் மக்கள் அவசர கண்ணோட்டத்தில்தான் அனைத்தையும் பார்க்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் மனம் ஆசைப்படுவதை அல்லது நினைப்பதை மட்டுமே கண்கள் பார்க்கின்றன. அதனால்தான் நிஜத்தை கண்டுபிடிக்க முடியாமல் போகிறது.

பிரசன்னாவைப் போலவே தன்னுடைய ஆசைப்படி இந்த உலகத்தைப் பார்ப்பவர்கள் தான் உலகில் அதிகம். சின்ன வயதில் ஒருவனுக்கு அப்பாதான் உலகத்திலேயே பலசாலி, அறிவாளி என்று தோன்றும். பள்ளிக்கூடம் போகும் நேரத்தில், ஆசிரியர்தான் உலகத்திலேயே பெரியவர் என்று தோன்றும். வேலைக்குப் போகும் நேரத்தில் தன்னுடைய முதலாளிதான் உலகத்திலேயே ஜீனியஸ் என்று தோன்றும். இவற்றுக்குக் காரணம் அதிகம் அறிந்து கொள்ளாத குறுகிய பார்வை மட்டுமே.

**அப்படியானால் எப்படி பார்க்கவேண்டும்?**

கண்ணையும் காதையும் புத்தியையும் மனப்பூர்வமாக திறந்து வைத்திருக்க வேண்டும். ஒரு தொழில் ஆரம்பிக்கும்போது தினம் ஆயிரம் ரூபாய் லாபம் வேண்டும் என்று ஆசைப்பட்டால், மனம் முழுக்க முழுக்க, அந்த ஆயிரம் ரூபாயை

மந்திரச்சொல்

வெறுக்கிறார் என்பதற்காக, ஒருவரை நேசிக்காமல் இருந்து விடாதே



மக்கள் அவசர கண்ணோட்டத்தில்தான் அனைத்தையும் பார்க்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் மனம் ஆசைப்படுவதை அல்லது நினைப்பதை மட்டுமே கண்கள் பார்க்கின்றன. அதனால்தான் நிஜத்தை கண்டுபிடிக்க முடியாமல் போகிறது.

அடைவது பற்றித்தான் சிந்திக்கும். ஒரு லட்சம் ரூபாய் சம்பாதிக்கும் வாய்ப்பு கண்ணுக்கு முன்பு இருந்தாலும் தெரியாது.

ஓர் அழகான பெண்ணுக்குப் பின்னே வாலிபர் செல்லும்போது, எதிரே உறவினர்... நண்பர் என யார் வந்தாலும் அவர் கண்கள் பார்க்கவே பார்க்காது. அதனால் குறுகிய பார்வை கொண்டவர்கள், தங்கள் பாதையையும் பார்வையையும் மாற்றிக்கொள்ள வேண்டும். சகலத்தையும் திறந்த மனதுடன், எந்த முன்முடிவும் இல்லாமல் விசாலமாக பார்க்க கற்றுக்கொள்ள வேண்டும்.

**எதற்காக விசாலமாக பார்க்க வேண்டும்?**

வாழ்க்கையில் நிறைய பணம் அடையவேண்டும் என்ற குறுகலான பார்வையுடன் ஏராளமான நபர்கள் வாழ்கிறார்கள். ஒரே ஒரு வீடு மட்டும் சொந்தமாக வாங்கிவிட்டால் போதும், ஒரே ஒரு கார் வாங்கிவிட்டால் போதும், சொந்தமாக ஒரு பிசினஸ் தொடங்கினால் போதும் என்ற ஒற்றைப் பார்வை பலருடைய வாழ்நாள் ஆசையாக இருக்கிறது. பணம், புகழ், சொத்து போன்ற ஏதேனும் ஒரு குறிக்கோளை நிறைவேறு வதற்காக தன் வாழ்நாளின் பெரும்பாலான நேரத்தை செலவழிக்கிறார்கள். ஆனால் வாழ்க்கை என்பது ஏராளமான அனுபவம் நிறைந்த புத்தகம். அத்தனை பக்கங்களையும் ரசிப்பதற்கு விசாலமான பார்வை நிச்சயம் வேண்டும்.

**பார்ப்பது எப்படி?**

கண்டதையும் பார்க்கவேண்டும். அனைத்தையும் ரசிக்க வேண்டும். குழந்தையின் குறும்பு மட்டுமின்றி தாத்தாக்களின் தொணதொணப்பையும் ரசிக்க வேண்டும். கலை, இலக்கியம், அறிவியல், வரலாறு, கணிதம் என சகலத்தையும் அறிந்துகொள்ள முயல வேண்டும். இயற்கை ஏராளமான அதிசயங்களை தன்னில் புதைத்து வைத்துள்ளது. நீர்வீழ்ச்சி, ஆறு, கடல், மலை, எரிமலை என்று பார்த்து ரசிக்கவேண்டிய இடங்கள் ஆயிரமாயிரம் உள்ளன. இன்பத்தை கொண்டாடுவதற்கு உதவும் நட்புகளை பாராட்ட வேண்டும். காலம் காலமாக தொடரும் உறவுகளின் அன்பை மதிக்க வேண்டும். அனைவரது அன்பும் ஒத்துழைப்பும் இருந்தால் உன்னால் தொடர்ந்து வேகமாக செல்லமுடியும் என்பதால் அனைவரையும் பார்க்க கற்றுக்கொள்.

**பார்வை சரியாக இருக்கிறது என்பதை எப்படி அறிவது?**

உன் கண்ணில் புரை இருந்தால் காட்சிகள் அனைத்தும் மங்கலாகவே தெரியும். தன்னிடம் குறை உள்ளவர் பார்வைக்கு, எல்லாமே குற்றமாகத்தான் தெரியும். இவர்களால் எப்போதும் அடுத்த அடியை திடமாக எடுத்துவைத்து நகரமுடியாது. வழியில் நல்லது மட்டும் அல்ல, தீயவையும் எதிர்படவே செய்யும். அதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீ செல்லும் வழி சரியாக இருக்கிறது என்றால் உன் பயணம் சந்தோஷமாக இருக்கும். உன் வாழ்க்கைப் பயணம் இப்போது பதட்டமும் பரிதவிப்புமாக இருப்பது தெரிந்தால், உன் பார்வை குறுகல் என்று அர்த்தம். நின்று நிதானமாக அனைத்துப் பக்கமும் பார்வையை செலுத்தி உன் பயணத்தைத் தொடங்கு.

**நாலாபக்கமும் கவனத்தை சிதறவிட்டால் குறிக்கோளை அடையமுடியாதே..?**

குறிக்கோளை அடைந்தால் உனக்கு கிடைக்கப்போவது வெற்றி மட்டும்தான். அந்த வெற்றியை யாருடன் கொண்டாடுவாய்? உன்னை தலைமீது வைத்து கொண்டாடுவதற்கு குடும்பம் வேண்டும். பாராட்டுவதற்கு சுற்றமும் நட்பும் வேண்டும். அதனால் குதிரை போன்று ஓடாதே... பறவை போல் பறந்து செல். இலக்கையும் அடைவாய், இன்பமும் பெறுவாய்.

# இவ்வளவுதான் வாழ்க்கை

## இர்ஃபான்கானின் கடைசிக் கடிதம்



பதமஸ்ரீ விருதுபெற்ற பிரபல நடிகர் இர்ஃபான்கான், திடீரென கடந்த 2020ம் ஆண்டு புற்று நோயினால் இறந்துபோனார். அவரது கடைசி கடிதம் எத்தனையோ பேரின் வாழ்க்கைக்கு ஒரு திருப்புமுனையைக் கொடுத்திருக்கிறது. படித்துப் பாருங்கள் உங்களுக்கும் திருப்பம் நேரலாம்.

இதுதான் அந்த கடிதம்.

வாழ்க்கைக்கும் மரணத்துக்கும் இடையே ஒரே ஒரு சாலைதான். எனக்கு 'நியூரோ எண்டோக்ரைன்' புற்றுநோய் ஏற்பட்டிருப்பதை நான் அறிந்து வெகு சில நாட்களே ஆகின்றன.

எனது சொல்வளத்தில் 'நியூரோ எண்டோக்ரைன்' புதிய வார்த்தை. இது அரிய வகை புற்றுநோய் என்றார்கள். அப்படித்தான் போல. ஏனெனில், நான் அது குறித்து தேடியபோது மிக சொற்பமான தகவல்களே கிடைத்தன. அந்த வகை புற்றுநோய் பற்றிய ஆய்வுகளும் குறைவு என்பதால் தரவுகளும் குறைவாகவே இருந்தன. அதனாலேயே அதற்கு என்ன மாதிரியான சிகிச்சை அளிக்கப்படும் என்பதை கணிக்க இயலா நிலை என்னை சூழ்ந்திருந்தது. கிட்டத்தட்ட நான் முயல்வும் பிழைத்தலுமான சோதனை விளையாட்டில் இருந்தேன் என்றே சொல்ல வேண்டும்.

அந்த நோய் என்னுள் வரும் வரை நான் முற்றிலுமாக மாறுபட்ட விளையாட்டு ஒன்றில் இருந்திருக்கிறேன். ஒரு விரைவு ரயில் பயணத்தில் நானிருந்தேன். எனக்கு கனவுகள் இருந்தன. எதிர்கால திட்டங்களும், இலக்குகளும், ஆசைகளும் இருந்தன. நான் அவற்றால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தேன். அப்போது திடீரென என் தோளை யாரோ தட்டினார்கள். திரும்பிப் பார்த்தால் டிக்கெட் பரிசோதகர். அவர் என்னிடம் "நீ இறங்க வேண்டிய இலக்கு வந்துவிட்டது. கீழே இறங்கு" என்றார். நான் குழம்பிப் போனேன். இது நான் இறங்குமிடம் இல்லை என மறுதலித்தேன். ஆனால், அவர் ஊர்ஜிதமாகச் சொன்னார் "இது தான் இலக்கென்று". வாழ்க்கையில் இப்படித்தான் சில நிகழ்வுகள் நடக்கின்றன.

நான் சற்றும் எதிர்பார்த்திராத அந்த திருப்பம் எனக்கொரு விஷயத்தை உணர்த்தியது. சமுத்திரத்தின் நீரோட்டத்தை நம்மால் கணிக்க முடியாது. அத்தகைய நீரோட்டத்தில் மிதக்கும் ஒரு தக்கை தான் நாம். ஆனால், நாம் வெறும் தக்கை என்பதை உணராமலேயே சமுத்திர நீரோட்டத்தை மீறியும் தக்கையை (நம்மை) கரை சேர்க்க முற்படுகிறோம் என்பதை உணர்த்தியது.

எதிர்பாராத திருப்பமாக நோய் எனக்குக் கொடுத்த அதிர்ச்சியில், அச்சத்தில், பதற்றத்தில் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். அப்போது அருகிலிருந்த என் மகனிடம் ஏதோ உளறியதாக நினைவு. "நான் என்னிடம் இப்போதைக்கு எதிர்பார்ப்பது இந்த நோயை இதே மனநிலையில் எதிர்கொள்ளக் கூடாது. நான் என் நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது. அச்சமும், பதற்றமும் என்னை வென்றுவிடக் கூடாது. அது என்னை துயரத்தில் ஆழ்த்திவிடும்" என்று அவனிடம் கூறியிருக்கிறேன். ஆம், நோய் தரும் நம்பிக்கையின்மையை வெல்வதே எனது இலக்காக இருந்தது. ஆனால், அந்த வேளையில் தான் என்னை வலி கவ்வியது. அதுவரை நான் அனுபவித்த வலிகள் எல்லாம் அந்த பெரும் வலிக்கு அதன் தன்மைக்கு வீரியத்திற்கான முன்னோட்டம் என்பது போல் இருந்தன என்பதை உணர்ந்தேன். என்னை எதுவுமே சமாதானப்படுத்தவில்லை. எதுவும் ஆறுதலாக இல்லை. எதுவும் ஊக்கமளிப்பதாகவும் இல்லை. என் மனதில், நிலையற்றை தன்மை மட்டுமே நிலையானதாக இருந்தது.

நான் லண்டன் மருத்துவமனையில் பிரவேசிக்கும் போது முற்றிலுமாக சோர்ந்து போயிருந்தேன். சலிப்பு மிகுந்திருந்தது. என் சிறுவயதில் எனக்கு மெக்காவாகத் தோன்றிய லார்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்துக்கு எதிர்புறத்தில் தான் அந்த மருத்துவமனை இருந்தது. ஆனால், அதையெல்லாம் கருத்தில் கொள்ளும் நிலையில் நானிருக்கவில்லை. என் வலிகளுக்கு மத்தியில் விவியன் ரிச்சர்ட்ஸின் சுவரொட்டி ஒன்றைப் பார்த்தேன். உண்மையில் எனக்கு ஏதாவது நடந்திருக்க வேண்டும். ஆனால், என்னுள் எதுவுமே நடக்கவில்லை. இந்த உலகத்திற்கும் எனக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்ற உணர்வு மட்டுமே இருந்தது.

நான் சிகிச்சை பெற்ற அந்த மருத்துவமனையில் நானிருந்த தளத்திற்கு நேர் மேல் தளத்தில் சுயநினைவை இழந்தோருக்கான (கோமா) வார்டு இருந்தது. ஒரு நாள் எனது அறையின் பால்கனியில் நான் நின்றிருந்தபோது, ஒரு திடீர் சிந்தனை என்னை உலுக்கியது.

வாழ்க்கை எனும் விளையாட்டுக்கும் மரணமென்ற விளையாட்டுக்கும் இடையே ஒரே ஒரு சாலைதான் உள்ளது என்பதை உணர்ந்த தருணம் அது. எப்படி நான் சாலையின் ஒரு புறமிருக்கும் மருத்துவமனையில் நோயாளியாக நிற்க மறுபுறம் விளையாட்டு மைதானம் இருந்ததோ, எப்படி அந்த இரண்டையுமே யாரும் தனக்கு நிலையானதாக உரிமை கொண்டாட முடியாதோ அப்படித்தான் மனிதன் வாழ்க்கைக்கும் மரணத்திற்கும் இடையே நின்று கொண்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டேன். பேரண்டவெளியின் மதிநுட்பத்தை, மிகப் பிரம்மாண்டமான சக்தியை அதன் தாக்கத்தை உணர்ந்தேன். நான் சிகிச்சை பெற்ற மருத்துவமனை அமைந்திருந்த இடம் எனக்கு அதை இடித்துரைத்தது. ஆம், நிலையின்மை மட்டும்தான் நிலையானது.

அந்த மெய் உணர் தருணம் என்னை யதார்த்தின் முன் சரணையடச் செய்தது. நான் பெற்றுக் கொண்டிருக்கும் சிகிச்சை 4 மாதங்களுக்குப் பின் அல்லது 8 மாதங்களுக்குப் பின் இல்லை இரண்டு வருடங்களுக்குப் பின்னர் என்னை எங்கு கொண்டு சேர்க்கும், விளைவு என்னவாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புகளை எல்லாம் கடந்து நடப்பவற்றிற்கு என்னை உட்படுத்திக் கொள்ளத் தூண்டியது. அப்போது கவலைகள் பின்னடைவைக் கண்டன. அப்படியே சில நாட்களில் மங்கிப் போயின. அடுத்த சில நாட்களில் என் எண்ண வெளியிலிருந்தே கவலைகள் விலகியிருந்தன. முதன் முறையாக நான் சுதந்திரத்தை உணர்ந்தேன். முதன்முறையாக சாதனை படைத்ததாக நினைத்தேன். அப்படி ஒரு வெற்றியை முதன்முறையாக சுவைத்தது போல் இருந்தது. அது வெற்றியின் மாயாஜாலம் என்பேன். அண்டவெளியின் மதிநுட்பத்தின் மீதான எனது நம்பிக்கை தீர்க்கமானது. அது என் உடலின் ஒவ்வொரு செல்லிலும் புகுந்தது போல் உணர்ந்தேன்.

ஆனால், அது அங்கேயே நிலைத்திருக்குமா என்பதை காலம் தான் சொல்லும். இப்போதைக்கு இந்த உணர்வு நன்றாக உள்ளது.

நோயுடனான எனது போராட்டப் பயணத்தில் மக்கள் என்னை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் பலர் எனக்காகப் பிரார்த்தனை செய்கிறார்கள். நான் அறிந்த நபர்கள் மட்டுமல்லாது, எனக்குப் பரிச்சியமே இல்லாதவர்களும் கூட என் நலன் விரும்புகின்றனர். அவர்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நேர மண்டலங்களில் இருந்து எனக்காகப் பிரார்த்தனை செய்கின்றனர். அவர்கள் அனைவரின் பிரார்த்தனைகள் ஒன்றிணைகிறது. அது ஒரே சக்தியாக, ஒரே உயிரோட்டமாக உருமாறி எனக்குள் புகுந்தது. எனது முதுகெலும்பின் முடிவில் அதை நான் உணர்கிறேன். எனது புத்தியில் வளர்கிறது.

சில நேரம் மொட்டாக, சில நேரம் இலையாக, அப்புறம் தளிராக கிளையாக துளிர்க்கிறது. நான் அதை ரசிக்கிறேன். ஒவ்வொரு பூவும், ஒவ்வொரு கிளையும் கூட்டுப் பிரார்த்தனையால் விளைந்தவை. அவை என்னை ஆச்சர்யப்பட வைக்கிறது. எனக்குள் மகிழ்ச்சியையும், ஆர்வத்தையும் ஏற்படுத்துகிறது. அதேவேளையில், ஒரு தக்கை சமுத்திரப் பேரலையின் நீரோட்டத்தை தனக்கானதாக தகவமைக்க வேண்டிய அவசியமில்லை என்ற மெய்யை உணரச் செய்கிறது. தக்கை அசைந்தாடுவது இயற்கை. இயற்கை தனது தொட்டிலில் உங்களை மென்மையாகத் தாலாட்டிக் கொண்டிருக்கிறது என்று வாழ்க்கையை ஏற்கவும்.



www.gyanaguru.com

# திருமணங்கள்

## ஏன் தோல்வி அடைகின்றன..?

கவலை தோய்ந்த முகத்துடன் ஒரு தம்பதியர் ஞானகுரு முன்னே வந்து நின்றனர். ‘ஏராளமான வரன்களைத் தேடி, அவர்களில் இருந்து பொருத்தமான ஒருவரை என் மகளுக்குத் திருமணம் முடித்து வைத்தோம். ஆனால், அவர்கள் இருவருக்குள்ளும் தினமும் ஏதேனும் ஒரு காரணத்தால் சண்டை வந்துகொண்டே இருக்கிறது. அவர்கள் உறவு நிலைக்காதோ என்ற பயம் வருகிறது” என்றனர். அவர்களுக்குப் பின்னே ஒளிந்திருந்த, மகளை முன்னே வரவழைத்துப் பேசினார் ஞானகுரு.

“திருமணம் முடிக்கும் பெண்ணுக்குக் கூறவேண்டிய ஒரே ஒரு அறிவுரை என்ன தெரியுமா? ‘நீ உன் கணவனுக்குத் தாயாக இரு” என்பதுதான். ஏன் இப்படி சொல்கிறார்கள்..?

ஒரு குழந்தையை வளர்ப்பதற்கு பெண் மிகுந்த சிரமங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறாள். தூக்கம், உணவு, மகிழ்ச்சி, ஓய்வு போன்றவற்றை விட்டுத்தருகிறாள். குழந்தை எத்தனை முறை தவறு செய்தாலும் மீண்டும் மீண்டும் மன்னிக்கிறாள். இவற்றை எல்லாம் ஒரு பெண் தன்னுடைய எல்லா குழந்தைக்காகவும் சந்தோஷமாகவே செய்கிறாள். அப்படி ஒரு குழந்தையாகத்தான் கணவனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏனென்றால், ஒவ்வொரு கணவனும் மனைவியிடம் தன்னுடைய அம்மாவைத்தான் தேடுகிறான். தான் என்ன செய்தாலும், அதனை ஏற்றுக்கொள்ளும் அம்மாவாக, அவள் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறான். மேலும், தன்னுடைய குடும்பத்தின் பெருமையைக் காப்பாற்றும் அளவுக்கு ஒழுக்கம் நிறைந்தவளாக, அடக்கமான பெண்ணாக இருக்க வேண்டும் என்றும் நினைக்கிறான்.





www.gyanaguru.com



மனைவி இறந்துவிட்டால், ஆணால் அத்தனை எளிதாக தனியே வாழ்ந்துவிட முடிவதில்லை. மீண்டும் திருமணம் செய்துகொண்டால் மட்டுமே அவர்களால் வாழ்க்கையை நடத்த முடிகிறது. ஆனால், கணவனை இழந்த பெண்களால் எளிதில் தனித்து வாழ்ந்துவிட முடிகிறது.

ஆனால், இன்றைய பெண்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மை மிக்கவர்களாக இருக்கிறார்கள். ஆண், தன்னை, தன்னுடைய குணத்துக்காகவே நேசிக்கவேண்டும் என்று நினைக்கிறாள். அதாவது, இன்னொருவனுடைய தாயாக மாறுவதற்கு எந்த பெண்ணும் விரும்புவதில்லை, அதற்காக எந்தவொரு முயற்சியும் எடுப்பதில்லை.

தன்னுடைய தாயைப் போன்று மனைவி இல்லை என்ற அதிர்ச்சியை பெரும்பாலான ஆண்களால் தாங்கிக்கொள்ள இயலுவதில்லை. அப்படி மாறுவதற்கு மனைவியிடம் விருப்பமும் இல்லை என்பது மேலும் அதிர்ச்சி தருகிறது. ஆகவே, திருமணத்தில் ஏமாந்துவிட்டதாக நினைக்கிறான். இந்த உறவு நிலைக்குமா என்ற சந்தேகம் கொள்கிறான்.

அதேபோல், பெண்ணுக்கும் நிறைய விருப்பங்கள் இருக்கின்றன. அதாவது, தான் பார்த்து ரசித்த, வியந்த ஆண் போன்று தன்னுடைய கணவன் இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு பெண்ணும் நினைக்கிறாள். எல்லா நேரமும் தன்னை காதலிக்க வேண்டும், தன்னுடைய மகிழ்ச்சிக்கு எந்த வகையிலும் இடையூறு தரக்கூடாது என்று நினைக்கிறாள். குறைந்தபட்சம் தன்னுடைய தன்னுடைய தந்தையைப் போன்றாவது இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள். ஆனால், எந்த ஓர் ஆணும் தன்னுடைய குணத்தை திருமணத்திற்குப் பிறகும் மாற்றிக்கொள்வது இல்லை. அதனாலே, பெண்ணும் கடுமையான ஏமாற்றத்துக்கு ஆளாகிறாள்.

மந்திரச்சொல்

வனத்தை அழிப்பதற்கு ஒரு தீக்குச்சியும் வாழ்க்கையை அழிக்க ஒரு வார்த்தையும் போதும்.

ஆக, திருமணம் என்பது ஏமாந்துபோன இருவரின் சங்கமமாக இருக்கிறது. எந்த ஒரு செயலும், பேச்சும் சண்டையை நோக்கியே அழைத்துச் செல்வதாக அமைகிறது. தேவையே இல்லாமல் ஒரு பெண்ணிடம் தன்னுடைய எதிர்காலத்தை இழந்துவிட்டதாக ஆண் வருத்தப்படுகிறான். தன்னுடைய சுதந்திரம், சந்தோஷம் முழுமையாக பறிபோனதாக பெண் ஆத்திரமடைகிறாள். ஆகவே, இருவரும் ஒரே கூண்டில் அடைக்கப்பட்ட சண்டைக்கோழியாக மாறிவிடுகிறார்கள்.

ஒருவருமே தங்கள் சந்தோஷமும் எதிர்காலமும் பறிபோனதாக நினைத்து, ஒருவரையொருவர் குற்றம் சாட்டவும், சண்டை போடவும் செய்கிறார்கள். இனிமேல், சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை, பிரிவதுதான் ஒரே தீர்வு என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். இவர்களுக்குள் எரியும் நெருப்பில், பெற்றவர்கள் எண்ணெய் ஊற்றினால், அடுத்து விவாகரத்துதான், வாழ்க்கையில் மிகப்பெரிய தீர்வு என நினைக்கிறார்கள்.

பெரும்பாலான திருமண பந்தத்தில் மிகப்பெரும் குற்றவாளியாக ஆணே இருக்கிறான். ஏனென்றால், அவன் மனைவியைத் தேடாமல் தன்னுடைய தாயைத் தேடுகிறான் ஒவ்வொரு பெண்ணும் காதலியாக, மனைவியாக வாழ்த்தான் விரும்புவாளே தவிர, ஒருவன் செய்யும் தவறுகளை எல்லாம் பொறுத்துக்கொள்ளும் தாயாக மாற விரும்புவதில்லை.



பெண்ணை தன்னுடைய காதலியாகவும், மனைவியாகவும் ஒருவன் ஏற்றுக்கொண்டால், அதன்பிறகு அவளே தாயாகவும் மாறுவாள். அதுவரை ஆண் காத்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு பெண்ணும் அடிப்படையில் ஒரு தாய். மேலும், குடும்ப வாழ்வில் பெண்ணைவிட ஆணுக்குத்தான் கூடுதல் அனுகூலம் இருக்கிறது. அதன்படி, திருமணம் செய்துகொண்ட ஆண்களும், திருமணம் செய்துகொள்ளாத பெண்களும்தான் அதிக சந்தோஷமாக இருப்பதாக உணர்கிறார்கள்.

இன்னொரு உண்மையை ஆணும், பெண்ணும் புரிந்துகொள்ள வேண்டும். ஆணும், பெண்ணும் தனித்தனியே வாழ்ந்துவிட முடியும் என்றாலும், இயற்கை அவர்களை அப்படி படைக்கவில்லை. ஒருவருக்கொருவர் நிரப்பிக்கொள்ளும் வகையில் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ்வதுதான் சிறப்பான வாழ்க்கையாக கருதப்படுகிறது. எனவே, இன்று இருவரும் பிரிந்தாலும், வேறு ஒருவருடன் பின்னர் இணையத்தான் வேண்டும். எனவே, உடைந்துபோயிருக்கும் உறவை முடிந்த வரையிலும் சீர்படுத்தும் வேலையில் இருவரும் இறங்கவேண்டும்.

எந்த வயதில் இருந்தாலும் பெண்களை விட ஆண்கள்தான் தாம்பத்திய வாழ்க்கையில் அதிக சுகமும், சந்தோஷமும் அடைகிறார்கள் என்பதும் உண்மை. இன்னொரு உண்மையையும் ஆண் அறிந்துகொள்ள வேண்டும். அதாவது, மனைவி இறந்துவிட்டால், ஆணால் அத்தனை எளிதாக தனியே வாழ்ந்துவிட முடிவதில்லை. மீண்டும் திருமணம் செய்துகொண்டால் மட்டுமே அவர்களால் வாழ்க்கையை நடத்த முடிகிறது. ஆனால், கணவனை இழந்த பெண்களால் எளிதில் தனித்து வாழ்ந்துவிட முடிகிறது. எத்தகைய துன்பத்தையும் ஏற்றுக்கொண்டு வாழ்க்கையை நடத்திவிடுகிறாள். எனவே, ஆணுக்குத்தான் பெண் அதிகம் தேவைப்படுகிறாள் என்பதால், ஆரம்ப காலங்களில் அவனே அதிகம் விட்டுக்கொடுக்க வேண்டும்.

திருமண வாழ்க்கை சிறப்பாகத் தொடங்கவேண்டும் என்றால், முதலில் கட்டாயக் கல்யாணத்தை நிறுத்த வேண்டும். திருமணம் வேண்டாம், இந்த பெண் வேண்டாம், இந்த மாப்பிள்ளை வேண்டாம் என்று சொல்பவர்களை கட்டாயப்படுத்தி திருமணம் முடித்துவைத்தால், அவர்கள் அத்தனை எளிதில் தங்கள் மனதை மாற்றிக்கொள்ள மாட்டார்கள். சண்டை போடுவதற்கு சாக்கு பார்த்துக்கொண்டே இருப்பார்கள். எனவே, இதனை ஆரம்பத்திலேயே தவிர்த்துவிடுவது நல்லது.

திருமணம் முடித்தவர்களுக்கு இடையில் பொய், சந்தேகம் நுழைந்துவிடக் கூடாது. ஒருவரிடம் ஒருவர் தோற்பதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். விட்டுத்தரும் மனப்பான்மைதான் திருமண உறவை நிலைக்கச் செய்கிறது. சின்னச்சின்ன சண்டைகளால் தங்கள் வாழ்க்கை முடிந்துவிட்டதாக முடிவு எடுத்துவிடக் கூடாது. ஏனென்றால், ஒவ்வொரு நபரும் மகிழ்ச்சியாக வாழ்வது அவரவர் கையில்தான் இருக்கிறதே தவிர, வேறு ஒருவரிடம் அல்ல.

இறுதியில் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று உள்ளது. உலகெங்கும் தம்பதியருக்கு இடையில் சண்டை நடக்கிறது, விவாகரத்து நடக்கிறது என்றாலும், அதைவிட அதிகமாக ஏன் திருமணம் நடக்கிறது..?

ஏனென்றால், மனித வாழ்க்கையில் இதைவிட சிறந்த உறவு வேறு எதுவும் கண்டறியப்படவில்லை என்பதுதான். இந்த உறவுக்குத்தான் பலரும் காத்துக்கிடக்கிறார்கள். எனவே, கையில் இருக்கும் உறவின் மகிமையை அறியாமல் உடைத்துவிட வேண்டாம். ஆனால், பெரும்பாலோருக்கு ஒரு பொருள் உடைந்தபிறகுதான், காணாமல் போன பிறகுதான் அந்த பொருளின் அருமை தெரிகிறது. அப்படியொரு நிலைக்கு ஆணும் பெண்ணும் போய்விட வேண்டாம்

முட்கள் நிரம்பியிருந்தாலும், திருமண உறவு என்பது ஒரு ரோஜாவைப் பறிப்பது போன்றதுதான். பழகிவிட்டால் முட்களைத் தொடாமல் ரோஜாவை மட்டும் பறித்து மகிழ முடியும். அதுவரை பொறுமையாக காத்திருக்கவும், விட்டுக்கொடுக்கவும் கற்றுக்கொள்” என்றார் ஞானகுரு.

பெண்ணின் முகத்தில் தெளிச்சி தென்பட்டது.



# மனம் விட்டு பேசலாம் வாங்க

மகிழ்ச்சியை மனதார ஏற்றுக்கொள்வது போல், வாழ்வின் துன்பத்தையும் சில நேரங்களில் மனதார ஏற்கத்தான் வேண்டும். காலம் எல்லா துன்பங்களையும் துடைத்து தள்ளிவிடும் என்றாலும், அதுவரை காத்திருக்கத் தேவையில்லை.

ஆம், துன்பத்தில் இருப்பவர்கள் மனம்விட்டுப் பேசுவது ஓர் எளிய தீர்வு.

எல்லோருக்கும் துன்பத்தை கொட்டித் தீர்ப்பதற்கு தாயின் தோள்கள் கிடைத்துவிடு வதில்லை. உங்கள் சோகங்களைக் கேட்பதற்கும் ஆறுதல் சொல்வதற்கும் ஞானகுரு மையம் இருக்கிறது.

உங்கள் மனதில் இருக்கும் அத்தனை பாரங்களையும் இறக்கி வைக்க வாருங்கள். ஞானகுரு மைய உறுப்பினர்களிடம் பேசுவதற்கு கட்டணம் உண்டு.

உங்கள் தேவைக்கு தொடர்புகொள்ளுங்கள்...


## ஞானகுரு மகிழ்ச்சி

**நிறுவனர் :** எஸ்.கே.முருகன், **வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர் :** எம்.நிர்மல், **நிர்வாக மேலாளர் :** எம்.நிலா

**வடிவமைப்பாளர்:** வி.கிராபிக்ஸ், கே.எம்.பிரசன்னா

ஞானகுரு பப்ளிகேஷன், 22, நாகார்ஜுனா நகர் 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

**தொடர்புக்கு :** 044 24730338, +91 98844 53014, +91 81486 14112 **மெயில் :** skmnila1@gmail.com